# سُوْرَةُ طٰـهٰ

# ஸூரா தாஹா

## 20

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
### *Few Objectives*

❖ இந்த அத்தியாயத்தின் நோக்கம், ‘இஸ்லாத்தைப் பின்பற்றுதல் எளிது’ என்பதாகும்.

طه مَا أَنزَلْنَا عَلَيْكَ الْقُرْآنَ لِتَشْقَىٰ

20:1-2. தாஹா (நபியே!) நீர் துன்பப்படுவதற்காக நாம் இந்த குர்ஆனை உம்மீது இறக்கவில்லை.1

❖ அல்லாஹு தஆலா தன் தூதர் மற்றும் சமுதாயத்தினருக்கு பின்வரும் விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறான்: ‘‘(மக்களைச்) சிரமத்தில் ஆழ்த்துகின்ற மார்க்கமல்ல இது! இம்மார்க்கத்தைப் பின்பற்றுவோருக்கு, கண்ணியமும் வெற்றியும் கிடைக்கும்’’.2

❖ இஸ்லாம் மக்களைக் கஷ்டப்படுத்த வரவில்லை. மாறாக மக்களுக்கு நேர்வழிகாட்டவும், இலேசானதை உருவாக்கவும், வந்துள்ளது.

❖ இந்த அத்தியாயத்தில், அல்லாஹ்வின் அருளைப் பேசுகின்ற இரு சரித்திரங்கள், குறிப்பாக இடம்பெறுகின்றன.

♦ நபி மூஸா (அலை) அவர்களின் நிகழ்வு: மந்திரவாதிகளுக்கு இறை விசுவாசத்திற்கான அருள்கிட்டியது.. அதன்பின் பிர்அவ்னுடைய எச்சரிக்கை மற்றும் அச்சுறுத்தலால், அவர்கள் அஞ்சவில்லை.

♦ ஆதம் (அலை) அவர்களின் வரலாறு: ஷைத்தான் வழி செல்லாமல், அல்லாஹ்வால் அருளப்பட்ட வாழ்க்கைத் திட்டத்தைக் கடைபிடித்தால் அருள் கிட்டும்..!

فَقُلْنَا يَا آدَمُ إِنَّ هَٰذَا عَدُوٌّ لَّكَ وَلِزَوْجِكَ فَلَا يُخْرِجَنَّكُمَا مِنَ الْجَنَّةِ فَتَشْقَىٰ

20:117 அப்பொழுது “ஆதமே! நிச்சயமாக இவன் உமக்கும், உம்முடைய மனைவிக்கும் பகைவனானான் ஆதலால், உங்களிருவரையும் இச்சுவனபதியிலிருந்து திட்டமாக வெளியேற்ற (இடந்) தரவேண்டாம் இன்றேல் நீர் பெரும் இன்னலுக்குள்ளாவீர்.

❖ இவ் வாழ்க்கைத் திட்டத்தைக் கைவிடுவோர் கஷ்டத்திலும் சோதனையிலும் வீழ்ந்திடுவர்..!

قَالَ اهْبِطَا مِنْهَا جَمِيعًا ۖ بَعْضُكُمْ لِبَعْضٍ عَدُوٌّ ۖ فَإِمَّا يَأْتِيَنَّكُم مِّنِّي هُدًى
فَمَنِ اتَّبَعَ هُدَايَ فَلَا يَضِلُّ وَلَا يَشْقَىٰ

---

1. விபரங்களுக்கு: من أسباب السعادة: عبد العزيز بن محمد السدحان
2. விபரங்களுக்கு: هل تبحث عن السعادة؟ : صالح بن عبد العزيز بن عثمان سندي

20:123. “இதிலிருந்து நீங்கள் இருவரும் சேகரமாக இங்கிருந்து வெளியேறி விடுங்கள். உங்க(ள் சந்ததிக)ளில் சிலருக்குச் சிலர் பகைவர்களாகவே யிருப்பார்கள் அப்பொழுது நிச்சயமாக என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும் எவர் என்னுடைய நேர்வழியைப் பின் பற்றி நடக்கிறாரோ அவர் வழி தவறவும் மாட்டார், நற்பேறிழக்கவும் மாட்டார்.

وَمَنْ أَعْرَضَ عَن ذِكْرِي فَإِنَّ لَهُ مَعِيشَةً ضَنكًا وَنَحْشُرُهُ يَوْمَ الْقِيَامَةِ أَعْمَىٰ

20:124. “எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும் மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்” என்று கூறினான்.

قَالَ رَبِّ لِمَ حَشَرْتَنِي أَعْمَىٰ وَقَدْ كُنتُ بَصِيرًا

20:125 (அப்போது அவன்) “என் இறைவனே! நான் பார்வையுடையவனாக இருந்தேனே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்?” என்று கூறுவான்.

قَالَ كَذَٰلِكَ أَتَتْكَ آيَاتُنَا فَنَسِيتَهَا ۖ وَكَذَٰلِكَ الْيَوْمَ تُنسَىٰ

20:126 அதற்கு இறைவன்,) “இவ்விதம்தான் இருக்கும் நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன் அவற்றை நீ மறந்துவிட்டாய் அவ்வாறே இன்றைய தினம் நீயும் மறக்கப்பட்டு விட்டாய்” என்று கூறுவான்.

## சில தலைப்புகள
## *Few Topics*

1. திருக்குர்ஆனுடைய முக்கியத்துவம் மற்றும் அதனை அருளியோனின் தன்மைகள். (1-8)
2. புனிதப் பள்ளத்தாக்கில், மூஸா (அலை), அல்லாஹ்விடம் உரையாடுதல். (9-16)
3. மூஸா (அலை) அவர்களின் அற்புதம், பிர்அவ்னிடம் செல்வதற்கான கட்டளை மற்றும் மூஸா (அலை) அவர்களின் விண்ணப்பம். (17-36)
4. நபித்துவம் பெறுவதற்கு முன், மூஸா (அலை) பெற்ற உதவிகளின் விபரங்கள். (17-36)
5. ஹாரூன் (அலை) மற்றும் மூஸா (அலை) ஆகியோருக்கு, பிர்அவ்னிடம் செல்வதற்கான, உத்தரவு. (42-48)
6. மூஸா (அலை) மற்றும் பிர்அவ்னுக்கிடையே நிகழ்ந்த உரையாடல். (49-55)
7. பிர்அவன் மற்றும் மந்திரவாதிகளுடன், மூஸா (அலை)

அவர்களின் போர். (56-76)

8. பிர்அவ்னும் அவனது கூட்டத்தினரும் மூழ்கடிக்கப்படுதல்; பனூ இஸ்ராயீல்களுக்கு, அல்லாஹ் வழங்கிய உபகாரங்கள் - விபரங்கள். (77-82)
9. பனூ இஸ்ராயீல்களை 'ஸாமிரீ' வழிகெடுத்ததும், அதற்காக மூஸா (அலை), தன் சகோதரர் ஹாரூன் (அலை) மற்றும் தன் சமுதாயத்தினரைக் கடிந்து கொண்டதும். (83-99)
10. திருக்குர்ஆனைப் புறக்கணிப்போருக்கு ஏற்படும் முடிவும், மறுமையைப் பற்றிய காட்சித் துணுக்குகளும். (100-114)
11. ஆதம் (அலை) நிகழ்ச்சி: அல்லாஹு தஆலா இப்லீஸைக் குறித்து, ஆதம் (அலை) அவர்களை எச்சரித்தல்; அவர்கள் சுவனத்தில் இருந்து வெளியேற்றப்படுதல்: பூமிக்கு வருதல்.. விபரங்கள். (115-127)
12. முந்தைய சமுதாயங்களைப் பற்றிய விபரங்களும், முஷ்ரிக்குகளுக்கு, வேதனையைப் பற்றிய எச்சரிக்கையும். (128-129)
13. நபி (ஸல்) அவர்களுக்குச் சில வழிகாட்டுதல்கள். (130-132)
14. முந்தைய சமுதாயங்களைப் பற்றிய விபரங்களும், முஷ்ரிக்குகளுக்கு, வேதனையைப் பற்றிய எச்சரிக்கையும். (128-129)

## சில பாடங்கள்
### *Few Lessions*

1. அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக்கொள்வதும், மார்க்கத்தில் நிலைகுலையாத தன்மையை வெளிப்படுத்துவதும் அனைத்திலும் சிறந்ததோர் பாக்கியமாகும்.
2. மு.்.மினுடைய வாழ்க்கை, எப்போதும் (இறை) அச்சத்தின் மீதே அமைந்திருக்கிறது; விஷயம் இவ்வாறு இல்லையெனில், (இறை) அச்சத்தைக் கடைபிடிப்பது கட்டாயம் எனும் அளவிற்கு, திருக்குர்ஆனில், அல்லாஹ் இதனைக் குறிப்பிடமாட்டான்.
3. 'திருக்குர்ஆன் மிகவும் மகத்துவம் நிறைந்ததாகும். ஏனென்றால் இதனை அருளியவன், உயர்ந்து விரிந்து பரந்த விண்ணைப் படைத்தவன்'.. எனச் சிந்தனையைச் செலுத்த, அழைப்பு விடுக்கப்படுகிறது..!
4. அடம் பிடிப்பதிலும், அநீதமிழைப்பதிலும் வரம்புமீறுவோர், ஈமான் கொள்ளவும், அறிவுரை

பெறவும், அழைப்பு விடுக்கப்படுகிறது; அவர்கள் மீது ஆதாரம் நிலைநாட்டப்படுகிறது.

5. திருக்குர்ஆன்! படைப்புக்களை உருவாக்குகின்ற, சர்வ சக்தி கொண்ட, எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அருளப்பட்டிருக்கிறது. அவன் அழகையும் பரிபூரணத்தையும், தன்னகத்தே கொண்டவன். (அவ்வாறே) முழுமை பெற்ற வேதம் இது..! இத்திருவேதத்தை, வாழ்வின் நெறியாகவும், வழிகாட்டியாகவும் ஆக்கிக் கொள்பவர், விரைவாகவே, அல்லாஹ்வின் கிருபையால், ஈருலகிலும் வெற்றியைப் பெற்றிட இயலும்.
6. அல்லாஹ்.. தன்னிடமிருந்து, ஒரு மு..மின், அன்பையும் அமைதியையும் பெற்றிடுவதற்காக, மகத்துவமிக்க – கீர்த்திமிக்க – பரிபூரணம் வாய்ந்த (தனது) தன்மைகளால், தன்னைத், தானே அறிமுகப்படுத்துகிறான்.
7. வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைக் குறிப்பிட்ட உடனேயே, அல்லாஹ்வின் ‘கருணை’ (ரஹ்மானிய்யஹ்) எனும் பண்பு குறிப்பிடப்படுகிறது..! இது, ‘உலகத்தை நிர்வகிப்பது (ருபூபிய்யஹ்), அவனுடைய கருணையோடு தொடர்பு கொண்டதாகும்’, என்கிற பாடத்தைத் தருகிறது. திருக்குர்ஆன் இறக்கப்பட்டிருப்பதும், அவனுடைய கருணையால்தான், என்கிற குறிப்பும், கிடைக்கிறது.
8. (அல்லாஹ்) மனிதர்களின் நாடி நரம்புகளை அறிந்தவன்; எனவே மனிதன் ஒளிந்தும் மறைந்தும், தவறு செய்வதில் இருந்து, தன்னைக் காத்திடுக! எப்போதும் அல்லாஹ்வின் தண்டனையைப் பயந்து வருக!! எச்சரிக்கையாய் இருந்திடுக!!! அத்துடன் அவனை நெருங்கிட முயற்சித்திடுக!!!!
9. அல்லாஹ், பகிரங்கமானதையும், மறைவானதையும் அறிபவன், என அறிகிறபோது.., இதயம் அமைதி கொள்கிறது; அல்லாஹ்வைப் பொருந்திக் கொள்கிறது; இத்தகைய நெருக்கத்தால் அல்லாஹ்வை நேசிக்கிறது.. பொய்யர்களை அஞ்சாமல் எதிர்கொள்கிறது.. தவறான கொள்கையில் வீழ்ந்திடாமல் தப்பிக்கிறது..!
10. மூஸா (அலை) அவர்களின் சரித்திரம் எடுத்துரைக்கப்பட்டு, நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் தரப்படுகிறது.
11. மூஸா (அலை) நெருப்பையோ (நேர்)வழியையோ பெற்றிட, பள்ளத்தாக்கிற்கு வந்தனர்.. ஈருலக வெற்றிக்கான வழியைக் கண்டனர்; எதிரிகளை வெற்றிகொண்டனர்..!
12. அல்லாஹ், தான் விரும்பிய எந்த இடத்தையும், தான் விரும்புகின்ற எந்த நேரத்தையும், புனிதமிக்கதாக மாற்றலாம். எனவே முஸ்லிம்கள், அல்லாஹ் புனிதமானவைகளாகக் குறிப்பிடுபவைகளைக் கண்ணியப்படுத்திடுக!
13. மூஸா (அலை) அவர்களுக்குத் தன்னை, அல்லாஹ் அறிமுகப்படுத்தியபோது, தனது பெயரையே, முதலாவதாகக் குறிப்பிடுகிறான். இதிலிருந்து முன்னால் இருப்பவரின், பெயரை

முதலில் அறியவேண்டும்; இதன் மூலம் பிறகு வருகின்ற சட்டவிபரங்களின் தெளிவைப் பெற்றிடலாம்.! என்பதை அறியமுடிகிறது.

14. (உலூஹிய்யஹ்) வணக்க வழிபாட்டில் அல்லாஹ்வைத் தனிமைப் படுத்துவதன் தேட்டம், முழுக்க முழுக்க அல்லாஹ் மட்டுமே வணங்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

15. திக்ரு (இறைவனை நினைப்பது) – வணக்கத்தின் ஓர் அங்கமே என்றாலும், தொழுகையை 'திக்ரு'டன் சேர்த்துக் குறிப்பிட்டுக், கூறப்படுவதன் காரணம், தொழுகை இபாதத்தின் உச்சநிலையாகும்; திக்ரு செய்வதற்கான கருவியாகும்.

16. தொழுகையின் மூலம், வணக்கத்தின் உச்சம் தொடலாம்; அனைத்துப் பொருள்களில் இருந்தும், கவனத்தை (மீட்டு) அல்லாஹ்வின் மீது மட்டும், திருப்புகிறது; அதற்காக மனதைப் பக்குவப்படுத்துகின்றது; இத் தொழுகை, வணக்கத்தின் நிலைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

17. மறுமைநாளை விசுவாசிக்க, அழுத்தம் தரப்படுகிறது. ஏனென்றால், அந்நாளில் முழுமையான கூலி, வழங்கப்படும். கண்டிப்பாக வரவிருக்கின்ற மறுமை நாளுக்காக, மனிதன் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்பாட்டிற்காக, இது ஒரு தூண்டுகோல்.

18. மறுமை நாள் குறித்த அறிவு, வழங்கப்படாததன் சூட்சுமம் இதுவே.., என்றைக்குமே மனிதன் அல்லாஹ்வை அஞ்சி வாழவேண்டும் என்பதே!!

19. பின் வரும் வசனம், அமல் செய்வதில், காட்டவேண்டிய உறுதிக்கான ஆதாரமாகும்.

فَلَا يَصُدَّنَّكَ عَنْهَا مَن لَّا يُؤْمِنُ بِهَا وَاتَّبَعَ هَوَاهُ فَتَرْدَىٰ

20:16. "ஆகவே, அதனை நம்பாது, தன் (மன) இச்சையைப் பின்பற்றுபவன் திடனாக அதைவிட்டும் உம்மைத் திருப்பிவிட வேண்டாம். அவ்வாறாயின், நீர் அழிந்துபோவீர்.

இவ்வசனம், குருட்டு நம்பிக்கைக்கு (தக்லீத் செய்வதற்கு) எதிரான மிகப்பெரிய அடியாகும். ஏனெனில் தக்லீத் மற்றும் தக்லீத் செய்வோருக்கு இழிவும் அழிவும் உண்டு

20. மூஸா (அலை), தன் உரையை வளர்த்துக் கொண்டே சென்றனர். ஏனெனில் அல்லாஹ்வுடனான உரையாடலில், அவர்கள் இன்பம் கண்டனர்.

21. மூஸா (அலை) அவர்களுக்கு, பிர்அவ்னிடம் செல்லுமாறு கட்டளையிடப்பட்ட வேளையில், அவர்கள் அல்லாஹ்விடம் 4 விஷயங்களை வேண்டினர். அவையாவன:-

1) உள்ளம் விரிவாக்கப்படுதல்: قَالَ رَبِّ اشْرَحْ لِي صَدْرِي

20:25. (அதற்கு மூஸா) கூறினார்: “இறைவனே! எனக்காக என் நெஞ்சத்தை நீ (உறுதிப்படுத்தி) விரிவாக்கி தருவாயாக!

2) காரியம் எளிதாகுதல் : وَيَسِّرْ لِي أَمْرِي

20:26 “என் காரியத்தை எனக்கு நீ எளிதாக்கியும் வைப்பாயாக!

3) பிர்அவ்னுடன் தொடர்பு கொள்வதற்கான சாதனம் (நா-வன்மை) وَاحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِي

20:27 “என் நாவிலுள்ள (திக்குவாய்) முடிச்சையும் அவிழ்ப்பாயாக!

4) உலக ரீதியிலான வலிமை وَاجْعَل لِّي وَزِيرًا مِّنْ أَهْلِي

20:29 “என் குடும்பத்திலிருந்து எனக்கு (உதவி செய்ய) ஓர் உதவியாளரையும் ஏற்படுத்தித் தருவாயாக!

22. ஒரு பணியில், காட்டப்படுகின்ற உள்ளத்தின் அக்கறை (இதயத்தின் விரிவு) வெற்றியின் ஆதாரமாகும். ஒரு காரியம் விருப்பத்துடன் செய்யப்படுகின்றபோது, எதிர்கொள்ளும் துயரங்கள், பொருட்படுத்தப்படமாட்டாது. இத் தன்மை, உலகத்தில் கிட்டுகின்ற பலத்தால் சாத்தியமாகாது; அல்லாஹ்வால் அருளப்படுகின்ற ஹிதாயத் (நேர்வழியால்) தான் இது சாத்தியம் ஆகும்.

23. இதயத்தை விரிவடையச் செய்வது அல்லாஹ்வின் உதவி ஆகும். அதன் மூலமாக உடல் அல்லாஹ்வின் உத்தரவிற்கேற்ப, செயல்படும்; அது இல்லையேல், உடல் வலுவிழந்து, மனோ இச்சைகளின் அடிமையாகிவிடும்.

24. காரியங்கள் எளிதாக இருப்பது, உண்மையிலே, அல்லாஹ்வின் கிருபை ஆகும். முயற்சிக்கின்ற எவரும், அல்லாஹ்வின் கிருபையை விட்டும், தேவையற்றவராக இருக்க முடியாது. அப்படி இருப்பின், தோல்வியைக் காண்பார்; அல்லாஹ்வின் கிருபையைப் பெற்றவரோ, வெற்றிகரமானவராகத் திகழுவார்.!

25. ‘அடியார்களின் காரியத்தை இலேசாக்குவது’, என்பதன் பொருள். அல்லாஹ்வின் புறத்தில் இருந்து, கிடைக்கின்ற வெற்றிக்கான உத்தரவாதம் ஆகும், ஏனென்றால் அடியார்களைப் பொறுத்தவரை, அவர்களின் சக்தி, வரையரைக்குட்பட்டது; அறிவும் குறைவு; பயணமும் நெடியது..! அத்துடன் அவர்கள் செய்வதறியாமல், முறையிட்டு மன்றாடுவோராகவே உள்ளார்கள்....! (இந்நிலையில் இறை-உத்தரவாதம் உத்வேகத்தைத் தருவதாகும்)

26. பிரச்சாரத்திற்கு மொழி மிக அவசியமானது. அதன் மூலமாகத்தான் அழைப்புப் பணியைப் பரவலாக்கமுடியும். இதனால்தான், பிர்அவனின் இதயத்தில் அழைப்பின் தாக்கம், ஊடுறுவுவதற்காக, தன் நாவில் இருந்த திக்குவாயை, நீக்குமாறு

மூஸா (அலை) அல்லாஹ்விடம் வேண்டினார்கள். இதற்காகத்தான், தன் சகோதரர் ஹாரூனைத் தன்னுடன் அனுப்புமாறும், வேண்டுகோள் வைத்தார்கள்.

27. சத்தியப் பிரச்சாரத்திற்கு, இனிய மொழிநடை இன்றியமையாததாகும். எனவே ஓர் இறையழைப்பாளர், தன் மொழிவளத்தைச் செம்மைப்படுத்துக! சத்திய அழைப்பிற்குத் தேவைப்படுகின்ற அனைத்துக் கருவிகளையும் தேடுக!! அல்லாஹ், நபிமார்களை அவர்களின் சமூகத்தினர், பேசிய மொழியில்தான் அனுப்பிவைத்தான்.

28. திருக்குர்ஆன் அரபிமொழியில் தெளிவாக அருளப்பட்டது; அதன் அழைப்பும் தெளிவானது! (எனவே) கனிவான வார்த்தைகளையும், கண்ணியமான பாணியையும், ஓர் இறையழைப்பாளர் கையாளவேண்டும்.

29. மூஸா (அலை) அவர்கள், ஹாரூன் (அலை) அவர்களை, தன் உதவிக்காக அழைத்தனர்; தனக்கு விரும்பியதை சகோதரருக்கும் விரும்பிய நிலையில், கஷ்ட நேரத்தில், பக்கபலமாக இருப்பதற்காக, தன் நபித்துவப் பணியில் தனக்குத் துணையாக உதவிட, (அல்லாஹ்விடம்) பிரார்த்தித்தனர். ஏனென்றால் உதவியாளர் இருக்கும் போது, நம்பிக்கை அதிகரிக்கும்.

30. இக்லாஸ் (மனத்தூய்மை) உள்ளோரை, அழைப்புப் பணிக்காக உதவிக்கழைப்பது, அவசியமாகும். மூஸா (அலை) அவர்கள் தன் இரப்பிடம், தனக்கு உதவிடும் ஒருவரை வேண்டினார்கள்.

31. மூஸா (அலை) அழைப்புப் பணியை விரிவுபடுத்தவே, தன் சகோதரருடைய நபித்துவத்திற்காக, பிரார்த்தித்தார்கள்.

32. அல்லாஹு தஆலா, இக்லாஸ் – மனத்தூய்மை கொண்டோரின் பிரார்த்தனைகளை மறுக்கமாட்டான். ‘துஆ’ கேட்பதற்காக, உத்தரவிட்டிருப்பவனும் அவனே! ادعوني استجب لكم

33. அழைப்பு மற்றும் சீர்திருத்தப்பணி செய்வோர், கண்டிப்பாக ‘துஆ’ கேட்போராய் இருந்திடுக; அதன் மூலம் தம் பணியில், வெற்றியைப் பெற்றிடுக! அல்லாஹ்வின் முன்னே, தன் அடிபணிதலையும், இயலாமையையும் வெளிப்படுத்தும் வண்ணம் பிரார்த்தித்திடுக!

34. அழைப்புப் பணியில், ஆழ்ந்த ஈடுபாட்டுடன், முழு நம்பிக்கை, மற்றும் நன்றியுணர்வுடன், வீரியமாகச் செயல்பட, மூஸா (அலை) அவர்களுக்குக், குழந்தைப் பருவம் முதல் வாலிபப் பருவம் வரை, வழங்கியிருந்த தனிப்பட்ட உதவிகளையும், பாக்கியங்களையும், அல்லாஹ் அவர்களுக்கு எடுத்துரைத்தான்.

35. மூஸா (அலை) அவர்களைப் பேழையில் வைத்து, கடலில் விடுவதற்கான உதிப்பை, அல்லாஹ் அவர்களின் தாயாருக்கு

ஏற்படுத்தியதில், அடியார்களுக்கான கொள்கை விளக்கம், இப்படி இருக்கிறது: 'அல்லாஹ்வின் தீர்ப்பு, ஆரம்பத்தில் அது புரியாத புதிராக இருந்தாலும், நன்மையைத்தான் தரும்'.

36. உரிய நடவடிக்கைகளைக் கையாண்டு, அத்துடன், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்திடுக! பிறகு அக்காரியத்தை அல்லாஹ்வுடைய முடிவின் மீது, விட்டுவிடுக!! ஏனென்றால் அல்லாதஹ்வின் மீது, நம்பிக்கை கொள்கிறவருக்கு, அல்லாஹ் போதுமானவன். ومن يتوكل على الله فهو حسبه

37. மூஸா (அலை) அவர்களைப் பெற்றுக் கொண்ட கடல், அவர்களைப் பிர்அவ்னுடைய கடற்கரையில் போடுவதற்காக.., அல்லாஹ் இட்ட உத்தரவும், மூஸா (அலை) அவர்கள் மீது அல்லாஹ் புரிந்த கிருபையாகும். ஏனென்றால், அதனால் மூஸா (அலை) அவர்களை, பிர்அவ்ன் எடுக்க.. பின் அவனிடமே வளர்ந்தார்கள்.

38. மூஸா (அலை) அவர்கள் மீது, ஆஸியா அவர்களுக்கு அல்லாஹ் பாசத்தை ஏற்படுத்தினான். இதனால் அவர்கள் மூஸா (அலை) அவர்களை, தனது வளர்ப்பு மகனாக ஆக்கி, வளர்த்து வந்தார்கள். பிர்அவ்னுடைய உள்ளத்திலும், அல்லாஹ் பாசத்தைப் போட்டிருந்தான்.., என்பது மூஸா (அலை) மீதான அல்லாஹ்வின் பாசத்தைக் குறிக்கின்ற சான்று..!

39. மூஸா (அலை) அவர்கள் மற்றும் ஹாரூன் (அலை) ஆகியோருக்கு, குறைவின்றி திக்ரு செய்யுமாறு, குறிப்பாக, பிர்அவ்னிடம் உரையாடச் சென்றபோது,. அல்லாஹ் உத்தரவிட்டான். காரணம், அல்லாஹ்வின் திக்ரு, அவர்களுக்கு உதவியாகவும், உத்வேகத்தைத் தருவதாகவும் அமைவதற்காக..!

40. மென்மையான பேச்சு, சத்தியப் பிரச்சாரத்தின் அடையாளமாகும். فقولا له قولا ليّنا அக்கிரமக்கார குறைஷியருக்கு, அழைப்பு விடுத்த, நபி (ஸல்) அவர்களுக்கும்கூட அல்லாஹு தஆலா, இதே கட்டளையைப், பிறப்பித்தான்.! அல்லாஹ் கூறுகிறான்:

" أدع الى سبيل ربك بالحكمة والموعظة الحسنة "

41. பிர்அவ்னிடம் மென்மையாகப் பேசிட, மூஸா (அலை) அவர்களுக்கு, அல்லாஹ் உத்தரவிட்டதன் சூட்சுமம் இதுதான்: மூஸா (அலை) அவர்களை பிர்அவன் வளர்த்தாளாக்கினான். எனவே சத்தியத்திற்காகவும், கடுமையாகப் பேச தடைவிதிக்கப்பட்டது.

42. மென்மையான பேச்சால், கேடுகள் மற்றும் முரண்பாடுகளில் இருந்து, பாதுகாப்பு கிட்டும். ஏனென்றால் நன்மை செய்கிறவர்களைவிட தீயவர்கள் அதிகம் உள்ளனர்.

43. நிலையான (சுவன) வாழ்விற்கான வாக்குறுதி, மென்மையான முறையில்தான் சொல்லப்படவேண்டும், ஏனென்றால் இது

எதிர்பார்ககப்படுவது; எதிர்பார்த்துக் காத்திருப்பது மனிதனுக்குக் கடினமானதாகும்.

44. மென்மையான பேச்சு, பிர்அவ்னிடம் சில தாக்கங்களை ஏற்படுத்தியது. அதில் ஒன்று, أنا ربّكم الأعلــى நான்தான் உங்களின் மிகப்பெரிய இறைவன்' எனக் கூறிய பிர்அவ்ன், {மூஸா (அலை) அவர்களின் வார்த்தைகளைக் கவனிக்கும் வகையில்} தன் இதயத்தை விரிவாக்கி, فمن ربّكمـــــا 'உங்கள் இருவரின் இறைவன் யார்?' என வினவுகிறான். மூஸா (அலை) அவர்களும், ஹாரூன் (அலை) அவர்களும், பயந்தவர்களாக இருந்த நிலையில், பிர்அவ்ன் அவர்களைத் தண்டிக்கவில்லை, தன் திமிரையோ, அதிகாரத்தையோ பிரயோகிக்கவில்லை!

45. உபதேசம், பிர்அவ்னிடத்தில் பின்வரும் மாற்றத்தை, ஏற்படுத்தியது, மரணிக்கும் வேளையில், (அல்லாஹ்வின்) அச்சம் தோன்றி, கூறலானான்: ''வணக்கத்திற்குரிய உண்மையான இறைவனை, விசுவாசித்தேன்..أمـــنت أنه لا اله الا الذي أمـــنت به ஆனால் அவனுடைய இப்பிரமாணம் ஏற்கப்படவில்லை

46. மூஸா (அலை) மற்றும் ஹாரூன் (அலை) (இருவருக்கும்) ''நீங்கள் இருவரும் அஞ்சாதீர்! நிச்சயமாக நான் உங்கள் இருவருடனும் இருக்கிறேன்... لا تخافا انني معكما أســـــــــمع وأرى - என அல்லாஹ், கூறியது, மனஅமைதியையும், நம்பிக்கையையும், ஏற்படுத்தவே..! கைதாகும் அவர்களின் அச்சத்தைப் போக்கவே..!! ஏனென்றால், அல்லாஹ் எவருடன் இருக்கின்றானோ, அவர், அல்லாஹ் அல்லாத மற்றவரை விட்டும், தேவையற்றவராக ஆகிவிடுவார்.

47. பிர்அவ்னுடன் நிகழ்ந்த உரையாடலில், ருபூபிய்யா – குறித்த வார்த்தைகள், அதாவது: அல்லாஹ், நிம்மதி மற்றும் பாதுகாப்பைத் தருகிறவன், என்கிற வார்த்தைகள், அவனுக்கு ஆசையூட்டவும், அல்லாஹ்வின் மீதான நேசத்தை அதிகப்படுத்தவும், மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டன.

إِنَّا رَسُولَا رَبِّكَ--------- قَدْ جِئْنَاكَ بِآيَةٍ مِّن رَّبِّكَ

48. பனீ இஸ்ராயீல்களை, பிர்அவ்ன் அடிமைப்படுத்தியதற்கான காரணம், அவனுக்கிருந்த அரசியல் ரீதியான பயமும், அவர்களின் பெருக்கம் மற்றும் வெற்றி குறித்த அச்சமும் ஆகும்.

49. ஒரு இறைஅழைப்பாளர், தர்க்கம் மற்றும் உரையாடலில் தன்னைத் தயார்படுத்திக் கொள்க! இதன்மூலம் எதிர்வாதம் அர்த்தமற்றதாக ஆகிவிடவேண்டும்.!... قد جئناك بأية

50. மூஸா (அலை) அவர்களின் அழைப்பில், முதலில் நற்செய்தி.. பிறகு எச்சரிக்கை இடம் பெறுகிறது. நபிமார்களின் இவ்வழிமுறை,'தாயீ' க்களின் வெற்றிக்கு வழிவகுக்கும்..!

51. மூஸா (அலை) மற்றும் ஹாரூன் (அலை) , இருவரும்

பிர்அவ்னிடத்தில், انارسولاربك 'நாங்கள் உமது இறைவனின் தூதர்கள்', எனக் கூறினர். அப்போது, பிர்அவ்ன் தன் இறைவன் யார்? எனக் கேட்கவில்லை. மாறாக, அதனை அலட்சியப்படுத்தி, தான் இறைவனை ஏற்றுக்கொண்டதாக, மக்கள் கருதிவிடக் கூடாது, என்பதற்காக, فمن ربكما உங்கள் இருவரின் இறைவன் யார்? எனக் கேட்டான்.

52. தலைப்பை விட்டும், திசை திருப்புவதற்காக, பிர்அவ்ன், உம்முடைய இறைவன் யார்? உங்கள் முன்னோர் நிலை என்ன? எனத் தொடர்ந்து கேள்வி கேட்டவண்ணமிருந்தான்.. மூஸா (அலை) அவர்களும் சளைக்காமல் பதிலிறுத்தனர். இவ்வாறு இறையழைப்பாளர்கள், அனைத்து வகையான கேள்விகளுக்கும் பதிலளிக்கத் தம்மைத் தயார்படுத்துக!

53. இறைவனைக் குறித்த கேள்விக்குப் பின், பிர்அவ்ன், முன்னோர்களின் நிலைகுறித்துக் கேள்வி கேட்டதில் ஒரு சூழ்ச்சி இருந்தது. அதாவது, நபி மூஸா (அலை) அவர்களின் அழைப்பு, ஒரே இறைவனை மட்டும், வணங்குவதை நோக்கி இருந்தது ; இதன்பால் மக்கள் சாய்ந்திடுவார்களோ, என்று, பிர்அவ்ன் ஏகத்துவத்தை அதிகமாக அஞ்சிக்கொண்டிருந்தான்.

54. ஏமாற்றத்தில் விழுந்து, 'என்னிடமும் இத்தன்மைகள் இருக்கின்றன' என, பிர்அவன் கூறவியலாத வகையில், மூஸா (அலை), தெளிவான ஆதாரங்களை முன்வைத்தனர்.!

55. மனிதன் இம்மண்ணில் இருந்தே.. இதன் மூலக்கூறில் இருந்தே.. பிறந்திருக்கிறான் ; இவனுடைய உடலின் மூலக்கூறும் இதுவே! இதன் விளைநிலத்தில் இருந்தே, உண்கிறான் ; இதன் நீரையே அருந்துகிறான் ; இதன் காற்றைத்தான் சுவாசிக்கவும் செய்கிறான்.. பூமி இவனுக்குத் தொட்டிலாக்கப் பட்டுள்ளது.. இதிலேயே திரும்பிச் செல்வான்.. இரண்டறக் கலப்பான்.. இதிலிருந்தே எழுப்பப்படுவான்..!

56. وفيها نعيدكم.. அதில் (பூமியில்), உங்களைத் திருப்புவோம்.. என்பதில் மனிதனை மண்ணில் புதைப்பதற்கான, ஆதாரமிருக்கிறது.. சாதாரணமான கப்று அல்லது பக்கவாட்டுக் கப்று, எதுவெனினும் சரியே! ஆனால், எரிப்பதோ, அல்லது தண்ணீரில் மூழ்கவைப்பதோ, பேழையிலிட்டுப் புதைப்பதோ, ஷரீஅத்தின் வழியன்று!

57. ஒரு இறை அழைப்பாளருக்கு, இறைச் செய்தியைச் சேர்ப்பிப்பதைத் தவிர, வேறு பொறுப்பில்லை! முடிவை எண்ணி தன்னை வருத்தக் கூடாது, யாருக்கு எப்போது, நேர்வழியைக் காட்டவேணடுமோ, அப்போது, அல்லாஹ் அவருக்கு நேர்வழியைத் தன் நாட்டப்படி தந்திடுவான்.

58. "فلنأتينك بسحر مثله அவ்வாறாயின் இதைப் போன்ற சூனியத்தை

நாங்களும் உமக்குத் திடனாகச் செய்து காண்பிப்போம் என்று பிர்அவன் கூறியதும், மூஸா (அலை) அவர்களுக்கு (போட்டிக்கான) நேரம் குறிக்க, அவன் வாய்ப்பளித்ததும், சூனியம் உள்ளது, என மக்கள் நம்பிக்கை கொள்வதற்காகவே..!

59. பிர்அவ்ன், சத்தியத்தை வெறுத்தான்... அதற்கெதிராக கச்சைகட்டி நின்றான்.. இதிலிருந்து அவனது அநியாயமும், ஆணவமும் தெளிவாகிறது.. அல்லாஹு தஆலா இவனைப் பற்றி இப்படிக் கூறிவிட்டான்: وجحدوا بها واستيقنتها أنفسهم ظلما وعلوّا

60. மூஸா (அலை) அவர்கள் மந்திரவாதிகளை, அல்லாஹ்வின் வேதனை மற்றும் மோசமான முடிவால், எச்சரித்தது, ஆதாரத்தை நிலைநாட்டுவதற்காகவே!

61. ஒருவரைப் பின்பற்றுவோர், அவரைத் தமது முன்மாதிரியாகக் கொள்கிறார்கள்; இன்னும் இவர்தான் சரியான வழியில் இருப்பவர்; இவர் காட்டும் வாழ்க்கைத்திட்டமே, மிகச் சிறப்பானது ; மேம்பட்டது.. என எண்ணி, அவருடன் முரண்படுகிறவர்களோடு மோதுவதையும், கட்டாயமானதாகக் கருதுகிறார்கள்.

62. மந்திரவாதிகள், மூஸா (அலை)அவர்களையும், ஹாரூன் (அலை) அவர்களையும் மற்றும் மக்களையும் அச்சுறுத்த விரும்பினார்கள். எனவே அவர்கள், அணிவகுத்திடுக ; அச்சமூட்டுக! எனத் (தங்களுக்குள்) கூறியழைத்தனர்.

63. 'மக்கள் காண்பதையே நானும் காண்கிறேன்' என மூஸா (அலை) அவர்கள், அறிந்திட, மந்திரவாதிகளுடைய, செயலின் தாக்கத்தை அல்லாஹ் காட்டினான். இதனால், அல்லாஹ்வின் அற்புதம் (மு.்.ஜிஸா) மிகைத்தபோது, அல்லாஹ் புரிந்த கிருபையை, அவர்களுக்கு, இன்னும் அதிகமாக உணர்த்தினான்.

64. فأوجس في نفسه خيفة موسى - இதில் நபி மூஸா (அலை) அவர்களையே அச்சுறுத்தும் வகையில், மந்திரவாதிகளின் மாந்திரீகச் செயல் பெரிய அளவில் இருந்தது.. என்பதும், அல்லாஹ்வின் அற்புதம் (அதைவிட) மகத்தானது என்பதை மூஸா (அலை) அறிய வேண்டும், என்பதும் தெளிவாக்கப்படுகிறது.

65. ولا يفلح الســـــــاحر حيث اتى- இவ் வசனத்தில், மாந்திரீகம் ஜெயிக்கும் ; மிகைக்கும் என்போருக்கு மறுப்பு இருக்கிறது.. (மந்திரவாதிகள் தோல்விகண்ட) நிகழ்ச்சிக்குப்பின் இடம்பெறுகின்ற இவ்வசனத்தின் மூலம், மாந்திரீகம் எவ்வளவு பூதாகரமாகத் தெரிந்தாலும், தோல்வி நிச்சயம் என்பது, தெரியவருகிறது.

66. فألقي الســـحرة سجدا وقالوا أمنا بربّ هرون وموسى - ஈமானை வெளிப்படுத்தி, உடனடியாக சிரம்பணிந்த (ஸஜதா) நிலையில் விழவைத்த, மு.்.ஜிஸா வின் வலிமையை வெளிப்படுத்த, இவ்வசனத்தில், செயப்பாட்டு வினை (மஜ்ஹூல்) பயன்படுத்தப்பட்டுள்ளது.

67. அநியாயக்காரர்கள், ஆதாரங்களின் முன்னிலையில், சரணாகதி அடைகின்றபோது, இப்படித்தான் மிரட்டுவார்கள். எப்போது (தம்) உள்ளத்தையும், ஆத்மாவையும் அமைதிப்படுத்தமுடியாமல் போகிறதோ, (பிறர்) உடல்மீது வேதனை மழையைப் பொழிய வைக்கிறார்கள்.

68. (சத்தியத்தை அறிந்த) மந்திரவாதிகள், மூஸா (அலை) அவர்களின் இறைவன் மீது ஈமான் கொண்டனர். பிர்அவ்னுடைய மிரட்டல்கள், அவர்களை, எதுவுமே செய்திடவில்லை.. தங்களின் விசுவாசத்திற்கான காரணத்தை, அவர்கள் இப்படிக் கூறினார்கள்: ‘எங்களின் பாவங்களையும், நாங்கள் செய்திட்டவைகளையும், மன்னிப்பதற்காக, எங்கள் இறைவனை விசுவாசித்தோம்’

69. بعـــــــــبادي - (விசுவாசித்த)அவர்களைக் கண்ணியப்படுத்தவும், நெருக்கத்தைக் காட்டவும் ‘என் அடியார்கள்’ இடம்பெற்றுள்ளது. இதில், அவர்கள் (பிர்அவ்னிடமிருந்து) விடுதலையடைவர், என்கிற குறிப்பு இருக்கிறது.. அவர்கள், இப்போது பிர்அவ்னின் அடிமைகள் அல்லவே!

70. பனீ இஸ்ராயீல் மக்கள், இழிவுடனும் மதிப்பிழந்த நிலையிலும், அடிமைகளாக பிர்அவ்னை ஆதரித்துக் கிடந்ததன் காரணம், பிர்அவ்னைப் பார்த்து நடுங்கியதே! அதே மக்கள், ஈமான் கொண்டதை அறிவித்த அதேநேரத்தில், அச்சமே இல்லாமல், பிர்அவ்னை எதிர்த்துக், குரல் கொடுக்கலானார்கள்.

71. மந்திரவாதிகள் அல்லாஹ்வின் மீது கொண்ட விசுவாசமும், அதில் அவர்கள் காட்டிய தீர்க்கமான உறுதியும், மார்க்கத்தை எடுத்துரைப்பவர்கள், மற்றும் இறையழைப்பாளர்களுக்கு, படிப்பினை தரும் பாடமாக உள்ளது. இதே ஈமானும், உறுதியும், ஆரம்பத்தில், நபி (ஸல்) அவர்களின் காலத்தில், நபித்தோழர்களுக்கு மத்தியிலும் இருந்தது.

72. மூஸா (அலை) அவர்கள், சமுதாயத்தை வழிகெடுத்திருந்த ‘ஸாமிரி’யைப் பழிக்கவில்லை. ஏனென்றால், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என எல்லோரையுமே பின்பற்றவேண்டும் என்று, மக்களுக்கு அவசியமில்லை. (இப்போது) ஸாமிரி – மற்றும் அவன்வழி சென்ற மக்களுக்கு இடையில், பொறுப்பாளர், ஹாரூன் (அலை) அவர்கள் ஏன் வரவில்லை? (என்பதே கேள்வி! எனவே ஸாமிரியைப் பழிக்காமல், ஹாரூன் (அலை) அவர்களைப் பழித்தார்கள்.)

73. وَقَدْ آتَيْنَـــاكَ مِن لَّدُنَّـــا ذِكْرًا - முந்தைய வரலாற்று உண்மைகளைக் கூறுவதன் நோக்கம், அவைகளைப் பதிவு செய்வதல்ல! அவைகளில் இருந்து படிப்பபினையைப் பெறுவதே!

74. காபிர்கள், மிகக் குறைந்த காலமே உலகில் வாழ்ந்ததாகக் கூறுவது, மறுமையின் பயங்கரங்களைக் காணுவதால்தான்..!

அப்போது அவர்கள், உலகில் கண்ட இன்பங்களை மறந்திடுவர் ; அழுது புலம்புவர்.

75. அந்த மக்கள், அல்லாஹ் அல்லாதவர்களை வணங்கிக் கொண்டிருந்தனர் ; அவர்கள், அல்லாஹ்விடம் சிபாரிசு செய்வர் என நம்பிக் கொண்டிருந்தனர் ; ‘இவர்கள் எங்களின் சிபாரிசுக்காக’ என்றனர். ஆனால் இப்போது, (மறுமையில்) அல்லாஹ் எவரைப் பொருந்திக் கொள்வானோ, எவருக்கு அனுமதியளிப்பானோ, அவர்களே சிபாரிசு செய்வர்.

76. அல்லாஹ் அனைத்தையும் சூழ்ந்தறிகிறான்.

77. ஈமான் உள்ளவர்களுக்கே, மறுமை நாளில் பாதுகாப்பு கிடைக்கும். அல்லாஹ்வின் நீதியின் மீது, அவர்கள் நம்பிக்கையுடன் இருப்பர். அநீதமிழைக்கப்படுவோம் என்கிற அச்சம் அவர்களுக்கு சிறிதும் இருக்காது.

78. الملك الحق - உண்மையான அரசன், என்பதில் இருந்து, அல்லாஹ்வைத் தவிர்த்து அனைவரும் குறையுடையவர்களே! என்ற குறிப்பு தெளிவாகிறது. يومئذ الحق للرحمن அவனுடைய ஆட்சியில் எந்த முரண்பாடும் இல்லை.

79. ‘திருக்குர்ஆனை, வேகமாக ஓதக்கூடாது’ என்கிற தடையின் நோக்கம், திருக்குர்ஆன் (வசனங்களில்), சிந்தனை செலுத்தப்படவேண்டும் என்பதே! அதை மனனமிட்டு, பாதுகாப்பைப் பெறுக! பொருளுணர்ந்து உள்ளத்திற்கு ஒளியூட்டுக! பக்கத்தில் இருப்பவர்கள், விளங்காத வகையில், அவசரமாக ஓதுவதைத் தவிர்த்திடுக!

80. ان لك ألا تجوع فيها ولا تعرى - பசி – உள்ளார்ந்த துயரம் ; நிர்வாணம் - வெளிப்படையான இழிவு.. அவ்வாறே وأنّك لا تظمأ فيها ولا تضحى - இவைகளும், ஒன்றுக்கொன்று எதிரானவையே! தாகம் - உள்ளார்ந்த வெப்பமாகும், வெயில் - வெளிப்படையான வெப்பமாகும். இவை அனைத்தில் இருந்தும், சுவனவாசிகள் பத்திரமாக இருப்பர்.

81. மனித மனம் எந்த அளவிற்குத், தன்னைக் கட்டுப்படுத்துமோ, அந்த அளவிற்கு முன்னேற்றத்தின் உயரங்களை எட்டும் ; எந்த அளவிற்கு, மனோஇச்சையின் அடிமையாகுமோ, அந்த அளவிற்கு மிருகத்தனத்திற்கு இரையாகும்.

82. قال يا آدم هل أدلك على شجرة الخلد و ملك لا يبلى - ஷைத்தானின் ஏமாற்றுத் திட்டமே இது.. மனித வாழ்வு குறுகியதே.. அவனது ஆற்றலும் எல்லைக்குட்பட்டதே! எனவே மனிதன், நெடிய வாழ்வையும், அதிகாரத்தையும் ஆசைகொள்கிறான். ஷைத்தான், இத்தகைய வாசல்கள் வழியாகவே, மனிதனுள்ளே வருகிறான்.

83. மனிதர்களைத் தண்டிப்பதற்கு முன், (தீமையைத் தெளிவுபடுத்த) அவர்களிடம் தன் தூதரை அனுப்புவது, அல்லாஹ்வுடைய

அருளின் தேட்டமாகும்.

84. முஸ்லிம்கள் தங்கள் வீட்டை, முஸ்லிம் வீடாக மாற்றுவதும், கடமைகளைப் பேணுவோராக வீட்டிலுள்ளோரை ஆக்குவதும், அவர்களின் முதற் கடமையாகும். இதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வுடன் தொடர்பை வலுப்படுத்துக! இவ்வாறு, அவர்கள், சுவனத்திலும் குடும்பத்தினரோடு வீற்றிருப்பார்கள்..!

85. வீட்டிலுள்ளவர்களுக்கு, தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், நாமும் அதனை உறுதியாகக் கடைபிடிப்பதற்கான உபதேசம்.

86. வழிபாடுகள் அனைத்தும் சிரமமானவையே! இவைகள் அல்லாஹ்வை அடைவதில்லை. அதுமட்டுமில்லை ; அடியார்களின் வணக்கங்களை விட்டும் அல்லாஹ் தேவையற்றவன்.. ஆனால், இதன் மூலம் இறையச்சம் உருவாகிறது.. மேலும் மனிதன் தன் வணக்கங்களின் மூலம், இம்மையிலும், மறுமையிலும் பயனடைகிறான்; அல்லாஹ் அவனைப் பொருந்திக் கொள்கிறான்..!

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

❖ ‘முந்தைய ஸூராக்களில், நபிமார்களின் நிலைகுலையாத தன்மை மற்றும் எதிரிகளின் பகைமையைக் குறிப்பிட்டபின், ஸூரா தாஹாவில், நேரடியாக, நபி (ஸல்) அவர்களை முன்னிலைப்படுத்தி, ஆறுதலாக, (அவர்களை) ஊக்கப்படுத்தும் விதமாக, அல்லாஹ், இவ்வாறு கூறுகிறான்: ‘‘பெருவாரியான எதிரிகள், தொடர்ந்து பெரும் சூழ்ச்சிகளைச் செய்து வந்தாலும், உங்களுக்கு அல்லாஹ் மட்டும் போதுமே!’’

❖ <u>உதாரணம்:</u> மூஸா (அலை) அவர்கள் வாழ்வில் ... ஹிஜ்ரத் (நாடு துறத்தல்) – திரும்புதல் - எதிரிகளின் அழிவு விபரம். அவ்வாறே, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வில் ... ஹிஜ்ரத் - ஆட்சி – வெற்றி – பலமிக்கவர்களாக ஆகும் விபரம்.

❖ ஸூரா மர்யம் மற்றும் ஸூரா தாஹா ஆகிய இரண்டிலும் உள்ள (பொதுவான) தலைப்பு: ‘நன்மக்களுக்கு அல்லாஹ்வின் உதவி, எப்படி வருகிறது?!’

❖ ஸூரா மர்யமில், கிறித்தவர்களுக்கு, உபதேசம் இருக்கிறது ; ஸூரா தாஹாவில், யூதர்களுக்கு உபதேசம் இருக்கிறது. பொதுவாக இரு அத்தியாயங்களிலும், இணைவைப்பாளர்களுக்கு எச்சரிக்கை இருக்கிறது.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

اذْهَبْ أَنتَ وَأَخُوكَ بِآيَاتِي وَلَا تَنِيَا فِي ذِكْرِي 20:42

20:42 “ஆகவே, நீரும் உம் சகோதரரும் என்னுடைய அத்தாட்சிகளுடன் செல்வீர்களாக! மேலும் என்னைத் தியானிப்பதில் (நீங்களிருவரும்) சளைக்காதீர்கள்.

اذْهَبَا إِلَىٰ فِرْعَوْنَ إِنَّهُ طَغَىٰ 20:43

20:43 “நீங்கள் இருவரும் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள் நிச்சயமாக அவன் வரம்பு மீறிவிட்டான்.

فَقُولَا لَهُ قَوْلًا لَّيِّنًا لَّعَلَّهُ يَتَذَكَّرُ أَوْ يَخْشَىٰ 20:44

20:44 “நீங்கள் இருவரும் அவனிடம் (சாந்தமாக) மென்மையான சொல்லால் சொல்லுங்கள் அதனால், அவன் நல்லுபதேசம் பெறலாம் அல்லது அச்சம் கொள்ளலாம்.”

## திருக்குர்ஆன்

وَمَنْ أَعْرَضَ عَن ذِكْرِي فَإِنَّ لَهُ مَعِيشَةً ضَنكًا وَنَحْشُرُهُ يَوْمَ الْقِيَامَةِ أَعْمَىٰ 20:124

20:124. “எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும் மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்” என்று கூறினான்.


قَالَ رَبِّ لِمَ حَشَرْتَنِي أَعْمَىٰ وَقَدْ كُنتُ بَصِيرًا 20:125

20:125 அப்போது அவன்) “என் இறைவனே! நான் பார்வையுடையவனாக இருந்தேனே! என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்?” என்று கூறுவான்.

## அல்ஹதீஸ்

عن أبي هريرة رضي الله عنه قال : قال النبيُّ صلى الله عليه وسلم:
يقول الله تعالى : أنا عند ظن عبدي بي، وأنا معه اذا ذكرني، فان ذكرني في نفسه
ذكرته في نفسي، الخ (صحيح البخاري: ٧٤٠٥)

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள் : அல்லாஹு தஆலா கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘ நான் என்னைக் குறித்து என் அடியார் (மேற்கொள்ளும்) கருத்திற்கேற்ப, உள்ளேன். (உதவிக்காக) அவர் என்னை நினைக்கும் வேளையில், அவருடன் உள்ளேன். தன் மனதில் அவர் என்னை எண்ணுகிறபோது, என் மனதில் அவரை எண்ணுகிறேன். ஒரு சபையில், என்னை நினைவு கூர்ந்தால், அச்சபையினரை விட, சிறந்த (வானவர்) சபையில், அவரை நான் நினைவு கூர்கிறேன். என்னிடம் ஒரு ஜான், நெருங்கினால், நான் அவரை ஒரு முழம் நெருங்கிடுவேன். என்னை ஒரு முழம் நெருங்கி வறின், நான் அவருக்கு, இரு முழம் (ஓர் எட்டு) நெருக்கமாவேன். என்னிடம் நடந்து வந்தால், அவரிடம் விரைந்து வருவேன். (அல் புகாரீ - 7405)



# سُوْرَةُ الأَنْبِيَاءِ

## ஸூரா நபிமார்கள்

21

இது 'மக்கீ'
ஸூரா ஆகும்.

# சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ மனித குலத்திற்கு முன்மாதிரியாக இருக்கும் வகையில், நபிமார்களின் சாதனைகள் சில, முன்வைக்கப்படுகின்றன.
- ❖ இவ்வத்தியாயத்தின் பெயருக்கேற்ப, இதில், நபிமார்களின் சரித்திரங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- ❖ இதிலுள்ள சரித்திரங்களில் இறைத்தூதர்கள், தங்களின் சமூகத்தினருக்கு ஏகத்துவத்தை, எப்படி எடுத்துரைத்தனர்?! என எடுத்துக்காட்டப்படுகிறது.1
- ❖ ஓவ்வொரு காலகட்டத்திலும் மக்களில் மூன்று வகையினர் இருக்கின்றனர்: 2
  - ♦ மு.்.மின் - مؤمن - (இறை விசுவாசி).
  - ♦ முஷ்ரிக் - مشـــرك - (இணைவைப்பாளர்) மற்றும் காபிர் - كافر - (இறைமறுப்பாளர்)
  - ♦ ஙாபில் - غافل - (மறதியாளர்)
- ❖ 'மறதியாளர்கள்' யாரெனில், இவர்களுக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்ட வேண்டும்.. இவர்களை முன்னிலைப்படுத்தியே, இவ்வத்தியாயத்தின் ஆரம்பம் அமைக்கப்பட்டுள்ளது.

اقْتَرَبَ لِلنَّاسِ حِسَابُهُمْ وَهُمْ فِي غَفْلَةٍ مُّعْرِضُونَ 21:1

21:1. மனிதர்களுக்கு அவர்களுடைய கணக்கு விசாரணை (நாள்) நெருங்கி விட்டது ஆனால் அவர்களோ (அதனைப்) புறக்கணித்துப் பராமுகமாக இருக்கிறார்கள்.

- ❖ இத்தகைய மறதியில் இருந்து, முழுமையாக விலகி வருவதற்காக, இப்படித் தெளிவு தரப்படுகிறது.

بَلْ نَقْذِفُ بِالْحَقِّ عَلَى الْبَاطِلِ فَيَدْمَغُهُ فَإِذَا هُوَ زَاهِقٌ وَلَكُمُ الْوَيْلُ مِمَّا تَصِفُونَ 21:18

21:18. அவ்வாறில்லை! நாம் சத்தியத்தை கொண்டு, அசத்தியத்தின் மீது வீசுகிறோம் அதனால், (சத்தியம் அசத்தியத்தின் சிரசைச்) சிதறடித்துவிடுகிறது பின்னர் (அசத்தியம்) அழிந்தே போய்விடுகிறது. ஆகவே, நீங்கள் (கற்பனையாக இட்டுக்கட்டி) வர்ணிப்பதெல்லாம் உங்களுக்கு கேடுதான்.

- ❖ முந்தைய நபிமார்கள், குறிப்பிட்டதொரு சமுதாயம் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்காகவே, அனுப்பப்பட்டார்கள். ஆனால் நபி

---

1. مدارج السالكين بين منازل ايّاك نعبد وايّاك نستعين : أبو عبد الله محمد بن أبي بكر (ابن القيّم الجوزية)
2. விபரங்களுக்கு: الغفلة – مفهومها وخطرها وعلاماتها وأسبابها وعلاجها : سعيد بن علي وهف الحطاني

(ஸல்) அவர்கள், மறுமைநாள் வரை வருகின்ற, மக்கள் அனைவருக்காகவும், இறுதி நபியாக அனுப்பப்பட்டவர்கள்.. எனக், கடைசியாக வந்துள்ள, நபி (ஸல்) அவர்களைப் பற்றிய உண்மை, இங்கு தெளிவுபடுத்தப்படுகிறது.

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ 21:107

21:107. (நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை.

❖ இறைத்தூதர்கள் அனைவரும், அத் தவ்ஹீதுல் உலூஹிய்யஹ் - வணக்க வழிபாட்டில் ஏகத்துவம், என்பதை நோக்கியே, மக்களை அழைத்தனர்.! (21:25)

## சில தலைப்புகள்
### *Few Topics*

1. கணக்குப் பார்க்கப்படுகின்ற நாள் குறித்த எச்சரிக்கை, திருக்குர்ஆனையும், நபி (ஸல்) அவர்களையும், இணைவைப்பாளர்கள் பொய்ப்பித்தல், மற்றும் பொய்ப்பித்தவர்களின் முடிவு பற்றிய விபரம். (1-10)
2. பலசாலிகளாகத் திகழ்ந்த, முந்தைய சமுதாயத்தினர் அழிக்கப்படுதல். (11-15)
3. விண்ணும் மண்ணும் படைக்கப்பட்டதில் அல்லாஹ்வின் ஞானம், மற்றும் அல்லாஹ்வின் வல்லமை! (16-20)
4. வானத்தையும், பூமியையும் படைத்ததில் அல்லாஹ்வின் வல்லமை மற்றும் ஒரே ஓர் அல்லாஹ் என்பதற்கான ஆதாரங்கள். (21-33)
5. முஷ்ரிக்குகள், நபி (ஸல்) அவர்களோடு நடந்துகொண்டவிதம் குறித்த சுருக்கம்; இவ்வுலகத்திலும் மறுமையிலும், பெறவிருக்கின்ற வேதனை குறித்து, அவர்கள் எச்சரிக்கப்படுதல். (34-47)
6. மூஸா (அலை), ஹாரூன் (அலை), இப்றாஹீம் (அலை), லூத் (அலை), நூஹ் (அலை), தாவூத் (அலை), ஸுலைமான் (அலை), அய்யூப் (அலை), இஸ்மாயீல் (அலை), இத்ரீஸ் (அலை), துல்கிப்லு (அலை), யூனுஸ் (அலை), ஜகரிய்யா (அலை) ஆகிய நபிமார்கள் மற்றும் மர்யம் (அலை) ஆகியோரின் சரித்திரங்கள், பேசப்படுகின்றன. (48-98)
7. நபிமார்கள் கொண்டுவந்த மார்க்கம், ஒன்றே ; தமது இறைத் தூதர்களோடு ஒவ்வொரு சமூகமும் நடந்துகொண்ட விதம் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட, முடிவுகள் ..! (92-95)
8. யஃஜூஜ் , மஃஜூஜ் கூட்டத்தினரின் வருகை, மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று! இணைவைப்பாளர்களின் தண்டனை

விபரம்!!

9. மறுமை நாளின் துயரங்களில் இருந்து, மு.்.மின்கள் பெறுகின்ற பாதுகாப்பு, அல்லாஹ்வின் வல்லமை வெளியாகும் இடம்.!(101-106)

10. இரஸூல் (ஸல்) அவர்களின் தன்மைகள், அவர்கள் கண்ட இயக்கம், மற்றும் அவர்களைப் புறக்கணிப்போருக்கான எச்சரிக்கை..! (10 7-112)

## சில பாடங்கள்
## *Few Lessions*

1. இவ்வத்தியாயத்தில், நபிமார்களின் சரிதைகள் கூறப்படுவதன் நோக்கம், அழைப்பு மற்றும் சீர்திருத்தப்பணி செய்வோர் அந்த நிகழ்வு(களின் படிப்பினை)களால் பயனடைவதாகும். 1

2. இறைத்தூதர்களின் வழிமுறையில் நிலைத்திருப்போர்தான், வெற்றியாளர்கள்.

وَلَقَدْ كَتَبْنَا فِي الزَّبُورِ مِن بَعْدِ الذِّكْرِ أَنَّ الْأَرْضَ يَرِثُهَا عِبَادِيَ الصَّالِحُونَ 21:105

21:105. நிச்சயமாக நாம் ஜபூர் வேதத்தில், (முந்திய வேதத்தைப் பற்றி) நினைவூட்டிய பின்: "நிச்சயமாக பூமியை (ஸாலிஹான) என்னுடைய நல்லடியார்கள் வாரிசாக அடைவார்கள் என்று எழுதியிருக்கிறோம்.

إِنَّ فِي هَٰذَا لَبَلَاغًا لِّقَوْمٍ عَابِدِينَ 21:106

21:106. வணங்கும் மக்களுக்கு இதில் (இக்குர்ஆனில்) நிச்சயமாகப் போதுமான (வழிகாட்டுதல்) இருக்கிறது.

3. பெருவெடிப்புக் கொள்கை (Bing bang theory) கண்டுபிடிப்பால் இன்று அறிவியலாளர்கள், பெருமிதம் கொள்கிறார்கள் ; இக் கொள்கை, இப்னு அப்பாஸ் (ரலி) அன்ஹு அவர்களுடைய கூற்றின்படி, முன்பே இவ்வத்தியாயத்தின் வசனம் 30ல் இடம்பெற்றுள்ளது.

4. மனிதன் இறைவிசுவாசத்தைப் புறக்கணிப்பதற்கான, முக்கியக்காரணங்கள், மறதி, அறிவுரையை அலட்சியப்படுத்தல், மற்றும் உலக வாழ்வில் மூழ்கிக் கிடத்தல் ஆகியவையே!

5. மறுமை நாளுக்காக, நன்மைகளைத் தயார் செய்யவேண்டும் என, மனிதர்கள் தூண்டப்படுகிறார்கள். ஏனெனில் மனிதர்கள், வீணாகப் படைக்கப்படவில்லை ; இவ்வுலகப் படைப்பிற்குப் பின் இன்னொரு உலகம் இருக்கிறது.. அங்கே நல்லவர்கள், நற்கூலியைப் பெறுவார்கள். தீயவர்களோ, தண்டிக்கப் படுவார்கள்.

---

1. விபரங்களுக்கு: منهج الانبياء في الدعوة الى الله فيه الحكمة و العقل : ربيع بن هادي المدخلي

6. பிரச்சினையை, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து, அவனிடமே ஒப்படைப்பதால், கிடைக்கும் பயன், இறை உதவியும், வெற்றியும் ஆகும்.
7. அசத்தியத்தின்பால் அழைப்போரின் அடையாளம், அவர்கள் தங்கள் பிரச்சினைகளில், நிம்மதியில்லாமல் தவிப்பர்.
8. முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தினரின் தனிச்சிறப்பு : முந்தைய சமுதாயத்தினரைப் போல், திடீரென முழுமையாக அழிக்கப்படமாட்டார்கள்.
9. 29:51 أَوَلَمْ يَكْفِهِمْ أَنَّا أَنزَلْنَا عَلَيْكَ الْكِتَابَ يُتْلَىٰ عَلَيْهِمْ ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَرَحْمَةً وَذِكْرَىٰ لِقَوْمٍ يُؤْمِنُونَ

   அவர்களுக்கு ஓதிக்காட்டப்படும் இவ்வேதத்தை நாம் உம் மீது இறக்கியிருக்கிறோம் என்பது அவர்களுக்குப் போதாதா?

   திருக்குர்ஆன் அல்லாஹ்வின் மிகப்பெரிய அத்தாட்சியாகும். யார் இவ்வேதத்தை, விசுவாசம் மற்றும் அமைதிக்கான கேந்திரமாகக் கருதுகிறார்களோ, அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.
10. அடியார்களின் பலத்தைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு இறைச் செய்தி எளிதாகச் சென்றுசேர, நபித்துவ நியமனத்திற்காக, மனிதர்களைத் தேர்ந்தெடுத்தது, தன் அடியார்களுக்கு அல்லாஹ் செய்த அருளாகும்.
11. கல்வியாளர்களிடம் கேள்வி கேட்டல், கட்டாயமானதாகும். ஏனெனில் அவர்கள்தான் மார்க்கத் தீர்ப்புகளை(பத்வாக்களைத்) தருவார்கள். மார்க்கமறியாதவன், தன் அறியாமையைக் காரணமாகக் காட்டமுடியாது.
12. அல்லாஹு தஆலா, தன் தூதர்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை ஏற்றிருக்கிறான். அவ்வாறே அவர்களைப் பின்பற்றுகிறவர்களையும், உதவியாளர்களையும், நபிவழியை அவர்கள் முறையாகப் பரப்பும் வரை, காப்பாற்றுவான்.
13. அரபியர்களின் கண்ணியமும் சிறப்பும், அவர்களைக் குறிப்பிடுகின்ற, இந்தத் திருக்குர்ஆனை, அவர்கள், பற்றிப்பிடிக்கும் காலம் வரைதான்!.
14. திருக்குர்ஆனைக் கவனமாகப் படித்து, ஆழ்ந்து சிந்தித்தால், விளக்கம் மற்றும் விரிவுரைகளின் வாயில்களை, அது திறந்து தருகிறது.. அடியார்கள், தம் செயல்களில் அதனை நடைமுறைப்படுத்தத் தூண்டுகிறது.. முழுமையான பயன் விளைகிறது.. ஈருலக வெற்றியும் கிட்டுகிறது.!
15. أفلا تعقلون... இவ்வசனம், அறிவைப் பயன்படுத்த ஊக்கமளிக்கிறது.! ஆழ்ந்து சிந்திக்க அழைப்பு விடுக்கிறது! அறிவை உபயோகிக்காதவர்களை விமர்சிக்கிறது..!
16. அநியாயத்தினுடைய கேட்டின் காரணத்தால், வகை வகையான தண்டனைகளால், அல்லாஹ் எச்சரிக்கிறான்.

17. அடியார்கள் தங்களின் அநியாயத்தால், அல்லாஹ்விற்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ் இந்த சமுதாயத்தைப் போக்கிவிட்டு, வேறொரு சமுதாயத்தைக் கொண்டுவர ஆற்றல் மிக்கவன்.
18. அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து, எவரும் ஒளிந்தோடவோ, தப்பிக்கவோ இயலாது ; ஓடுவதால் எந்தப்பயனும் விளையப் போவதுமில்லை.
19. நல்லவர்களும் தீயோரிடையே இருக்கின்ற நிலையில், நிலநடுக்கம் போன்றவைகளால், அல்லாஹ் அவர்களை எவ்வாறு அழிக்கின்றான்?! நல்லோர், தம்முடைய எண்ணத்தின் (நிய்யத்தின்) அடிப்படையில் எழுப்பப்படுவர்.
20. அடியான் ஆரோக்கியமான நிலையில், தன் பாவங்களை உணர்ந்து வருந்தினால், அது அவனுக்குப் பயனளிக்கும் ; இறை வேதனை வந்தநிலையில், உணர்வதால், பயனில்லை.
21. அல்லாஹ்வின் காரியங்கள், விளையாட்டு வேடிக்கை மற்றும் வீணானவைகளை விட்டும் தூய்மையானவை ஆகும்.
22. அல்லாஹு தஆலாவிற்கு, மனைவி மற்றும் பிள்ளைகளைக் கற்பிப்பது, தூரமான வழிகேடு ஆகும். யூதர்கள் உஜைர் (அலை) அவர்களை, அல்லாஹ்வின் குழந்தை எனக் கூறி வழிகெட்டனர். கிறித்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை, அல்லாஹ்வின் பிள்ளை எனச் சொல்லி, தவறான பாதையில் சென்றனர். இணைவைப்பாளர்களோ, வானவர்களை, அல்லாஹ்வின் பெண்பிள்ளைகள் என்றுரைத்து, வழிதவறினர்.
23. சத்தியத்தின் ஒளி, அசத்தியத்தை நொறுக்குகிறது ; சத்தியம் ஜெயிக்கிறது..!
24. அல்லாஹு தஆலா, அநியாயக் காரர்களை அழித்தொழிப்பதாக வாக்களித்துள்ளான்.
25. அல்லாஹ்விற்கு, மனைவியோ மக்களோ இருக்க முடியாது, என்பதைப் பகுத்தறிவு, பறைசாற்றுகிறது. ஏனென்றால், படைப்புகள் யாவும், அல்லாஹ்விற்கே உரியன! அவனையே சார்ந்துள்ளன!! இவைகளில் சிறிய அளவில்கூட, தீமை புரியாத வானவர்களும் உள்ளனர்.
26. அல்லாஹ், வாழ்வையும் மரணத்தையும், தருகின்ற தன்மை கொண்டவன் ; தருபவன்! எந்த ஆற்றலும் இல்லாத நிலையில், சிலை எப்படி இறைவனாக முடியும்?
27. அல்லாஹ் இருக்கிறான் ; தனித்தவனாக இருக்கிறான், என அறிந்திட அல்லாஹ் தந்திருக்கின்ற அறிவே போதுமானதாகும். எனவே இணைவைப்பாளர்களுக்கும், சிலையை வணங்குபவர்களுக்கும், சால்ஜாப்புக் கூறவோ மற்றும் நொண்டிக் காரணத்திற்கோ வழி இல்லை!

28. அல்லாஹ்வைப் புகழ்ந்து (ஹம்து), துதித்து (தஸ்பீஹ் செய்து) வந்தால், மனதில் அமைதி குடிகொள்ளும் ; சத்தியத்தில் நிலைத்திருக்க சக்தி கிடைக்கும்!

29. கல்வியும் ஞானமும், இதயத்தில் இடம்பெறின், பயனளிக்கும் ; இதற்காகவே இத்தகைய கல்விக்காக அல்லாஹ் அழுத்தம் தருகிறான். அத்துடன், ஏகத்துவத்திற்கான ஆதாரங்களையும் முன் வைக்கிறான்.

30. அரசன், அடக்கியாள்கிறவன், நுண்ணறிவு படைத்தவன், என்கிற இறைச் செயல்பாடுகளை, ஆட்சேபிப்பது பொருத்தமற்றது ; முழுமையாகக் கீழ்ப்படிதல், கட்டாயமானது ஆகும். அல்லாஹ் ஏன் இப்படிச் செய்தான்? ஏன் இப்படிச் செய்யவில்லை? என்று சொல்லமுடியாது.. ஒரு காரியத்தின் சூட்சுமம், புரியுமானால், அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறி, அல்லாஹ்விடம் ஒப்படைக்க வேண்டும்.. ‘ புரியாத எதையும் மனிதன் ஏற்கலாகாது’, என்பது வாதம் (Logic) அன்று! உலக ரீதியாக யோசித்துப் பார்த்தால், அன்றாடம் நாம் எத்தனையோ இயந்திரங்களைக் காரணம் அறியாமலேயே, இயக்குகிறோம். ஒவ்வொரு சக்கரத்தின் இயக்கத்தையும் அனைவரும், விரிவாக அறிந்திருக்கவேண்டும், என்பது அவசியமில்லையே! எனவே, ‘எந்த ஒன்றும் என் அறிவிற்கு எட்டினால் மட்டுமே ஏற்பேன்’ என்கிற தத்துவமே தவறானது ஆகும்.

31. ஆதாரமில்லாத எந்த கோரிக்கையும், அசத்தியமே! ஷிர்க்கின் போலித்தனம் தெளிவானது ! வேத அடிப்படையிலோ அறிவார்ந்த முறையிலோ, அதை யாரும் நிரூபிக்க இயலாது!!

32. மார்க்கத்தின் (அடிப்படை) அறிவைப் பெறுவது, கடமையானது ஆகும். அறியாமை மிகப்பெரிய நோய் ஆகும் ; இதனால் நேர்வழியில் இருந்து, அதிகமானோர், விலகி இருக்கிறார்கள் ; சத்தியத்திற்காக அவர்கள் பணியவில்லை..!

33. வானவர்களின் சொற்கள் மற்றும் செயல்களில் இருந்து, அல்லாஹ்வை மகிமைப்படுத்துவதன் மகத்துவம் புலனாகின்றது ; இதில் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

34. அல்லாஹ்வின் அடியார்கள் மீது, அவனுடைய பெருங்கிருபை உண்டு ; தன் அடியார்களில் ‘அல்லாஹ் யாரைப் பொருந்திக் கொள்கிறானோ, அவர்களிடம் சிபாரிசு செய்வதற்காக உத்தரவிடுவான்’, என்பது மேலதிகச் சிறப்பு ஆகும். இவர்கள் ஓரிறைக் கொள்கை கொள்கையாளர் ((முவஹ்ஹித)) ஆவர்.

35. பெரும்பாவம் செய்தோருக்கும் சிபாரிசு கிடைக்கும், என்பதற்கான ஆதாரம் ஜாபிர் (ரலி) வழியாக அறிவிக்கப் படுகின்ற நபிமொழியே! நபி (ஸல்) அவர்கள் பின் வரும் வசனத்தை ஓதினார்கள் ; ولا يشـــــــفعون الا لمن ارتضى பிறகு இப்படிக்

கூறினார்கள்: ‘‘எனது உம்மத்தினரில் பெரும்பாவம் செய்தோருக்கும், நான் சிபாரிசு செய்வேன்.. ஆனால் அவர்கள் ஷிர்க் (இணைவைப்பு) இல்லாதவராக இருக்க வேண்டியது, நிபந்தனை ஆகும்.

36. அல்லாஹ்வின் கீர்த்தி மற்றும் வணக்க வழிபாட்டிற்கெதிராகத் தர்க்கிப்பது, நிரந்தர நரகத்திற்கு வழிவகுக்கும். ஏனென்றால் இது மிகப்பெரிய பாவமாகும். அநியாயக்காரர்களுக்கு இதுவே கூலியாகும்.

37. சம்பூரணமான ஆதாரம், அல்லாஹ்விற்காக இருக்கிறது.. அல்லாஹ்வையும் அவனுடைய தனித்தன்மையையும் அறிவிக்கின்ற, ஏராளமான சான்றுகளைத் தன்னுடைய படைப்பில், அவன் அமைத்திருக்கிறான்! மனிதனுக்கு அறிவைத் தந்திருக்கிறான் ; அந்த அறிவை மனிதன் முறையாகப் பயன்படுத்தினால் அவன் நேர்வழியைப் பெறுவான்! அத்துடன் சிந்தித்து சீரதூக்கிப் பார்ப்பதறகாக, அல்லாஹ்வே, மனிதனுக்கு அழைப்பு விடுக்கிறான்.. .. أولم ينظروا في ملكوت السموات والأرض

38. திருக்குர்ஆன் அல்லாஹ்வின் மிகப்பெரிய அற்புதம் ; பல அற்புதங்களின் தொகுப்பு ஆகும்.

39. பின்வரும் வசனத்தில், காபிர்களுக்கு உண்மை தெரியவரும் என்கிற நற்செய்திக்கான குறிப்பு இருக்கிறது.. ..أولم يــــرا الذين كفـــروا இந்த வசனம் இக்காலத்தில் பேசுவதைப்போல், உள்ளது. இதிலுள்ள அத்தாட்சிகள் இக்காலத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.!

40. رتق மற்றும் فـــــــتق (இணைதலும் பிரிதலும்) திருக்குர்ஆனின் கல்விசார்ந்த அற்புதங்களில் ஒன்று ஆகும். அனைவருக்கும் இதில் படிப்பினை உண்டு ; குறிப்பாக அறிவியல் உலகம் சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

41. படைப்புகளில் வாழ்வின் ஆதாரம், 80 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் வரை நீரின் மீதே அமைந்துள்ளது என, நவீன அறிவியல் கூறுகிறது. தண்ணீர் ஓர் அடிப்படையான மூலக்கூறு ஆகும். அனைத்து உயிரினங்களின் அடிப்படையும் D.N.A (மூலக்கூறு)வின் மீது, அமைந்துள்ளது.. அதேசமயம் D.N.A வோ H2O (நீரின்) மீதே அமைந்துள்ளது, என்று நவீன அறிவியல் சொல்கிறது. இந்த உண்மை திருக்குர்ஆனில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

42. لعلهم يهـــــــــــتدون.. இதில் இரண்டு வகையான பொருள்கள் இருக்கின்றன.. 1. உணரப்படக் கூடியது: அதாவது பூமியில் சுற்றித்திரிவது, வழி அமைப்பது, மற்றும் ஊர் விட்டு ஊர் செல்வது 2. உணரப்படாதது: இதன் தொடர்பு கொள்கையோடு இருக்கிறது. அதாவது சுவனத்திற்கு இட்டுச் செல்கின்ற வழியைத் தெரிவு செய்தல்,

43. சிந்தித்து சீர்தூக்கிப்பார்ப்பது, விசுவாசம் மற்றும் அறிவின் திறவுகோல். அதிகமான அத்தாட்சிகள், அலட்சியம் மற்றும் மறதியால் பயனற்றுப் போகின்றன.

44. இரவும் பகலும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள்.!

45. படைப்புகளில் மறைந்துள்ள இரகசியங்களை அறிந்திட, திருக்குர்ஆன், குரல் கொடுக்கிறது! அவைகளில் இருக்கின்ற பயன்களைப் பெற்றிட, ஆர்வமூட்டுகிறது! இக்கால முஸ்லிம்களோ, இதில் கவனமற்று இருக்கிறார்கள். மற்றவர்கள் இப்பாதையைக் கையில் எடுத்துள்ளார்கள்.

46. காபிர்களுக்கு (விஞ்ஞான) அறிவின் மூலம் அல்லாஹ் ஆதாரத்தை நிலைநாட்டுகிறான்! ஏனெனில் அவர்கள் இதனை மறுக்க இயலாது. மரணம் - அறிவுள்ள எவரும், முரண்படாத ஒரு உண்மை ஆகும்.

47. நபிமார்கள் அல்லாஹ்வின் உண்மையான அடியார்கள் ஆவர்.. அல்லாஹ் அவர்களுக்குப் படைப்புகளில் தனிச்சிறப்பை வழங்கினான்,, அவர்களின் எதிரிகளுக்கு எதிராக, உதவி செய்தான். இருப்பினும், பொதுமக்களிலிருந்து, அவர்கள் மாறுபட்ட தன்மைகொண்டவர்களாக இருக்கவில்லை ; அவர்களுக்கும் மரணம் வந்தது..!

48. செழிப்பின் மூலமாகச் சோதிக்கப்படுவது, துன்பத்தின் மூலமாகச் சோதிக்கப்படுவதைவிட, கஷ்டமானதாகும். ஏனென்றால் நோய், பலஹீனம், வறுமை, மற்றும் இழப்பு ஆகியவை, சோதனைகளென (சாதாரணமாகப்) புரிந்துவிடும். ஆனால் ஆரோக்கியம், சுகபோகம், மற்றும் செல்வச் செழுமை ஆகியவைகளில் நிகழும் சோதனையை உணர்ந்து, மார்க்கத்தில் உறுதிகாட்டுவோர் குறைவானவர்களே! இந்த இரண்டு நிலைகளிலும் (சோதனையை அஞ்சி) அல்லாஹ்வோடு தொடர்புடன் இருப்பது, வெற்றிக்கான வழிமுறையாகும்.

49. தங்களுடைய சிறிய மற்றும் பெரிய விஷயங்களில் உதவியை நாடுவோர், உதவிடும் ஆற்றல் கொண்ட, அல்லாஹ்விடம் உதவி தேடுக! இந்த கற்பனையான தெய்வங்கள், உதவிபுரிய, சக்தியற்றவை! இவை தமக்கே உதவமுடியாதவை..!

50. ஒவ்வொரு விஷயத்திலும், அல்லாஹ் தன் மீதே ஆதரவு வைத்திடுமாறு, தன்னுடைய அடியார்களுக்கு, உத்தரவிடுகிறான்.

51. வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்கள், சுகபோகங்கள். செழிப்பு, மற்றும் உடனடியாகத் தண்டிக்காமல் அல்லாஹ் தந்த அவகாசம், ஆகியன இணைவைப்பாளர்களை ஏமாற்றிவிட்டன! மேலும் இந்த சொகுசு வாழ்க்கை, மனங்களைப் பாழாக்குகின்றன ; உணர்வுகளை மழுங்கடிக்கின்றன ; அகப்பார்வையை அழித்துவிடுகின்றன. இவை அருட்கொடைகள்

மூலமாக வருகின்ற, சோதனைகள் ஆகும்.

52. تنقصـــــها من أطرافها .. ஷன்கீதி (ரஹ்) அவர்களின் கூற்று: ‘‘குப்ரான பகுதிகள் மற்றும் தாருல் ஹர்ப் (போராட்ட பூமி) பகுதிகளை, நாம் நெருக்கடிக்கு உள்ளாக்குகிறோம். முஸ்லிம்கள் மூலமாக அவைகளைக் கட்டுப்படுத்துகிறோம்.. நாம் மிகைக்கிறோம்.

53. ஒரு மனிதன் தன் பாவங்களை ஒத்துக்கொண்டு, தன் வருத்தத்தைத் வெளிப்படுத்துவது, இவ்வுலகத்தில் இருக்கும்வரையில்தான் பயனளிக்கும்.

54. நபிமார்களின் நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டு, இறைவழிகாட்டுதல்கள யாவும், சட்டவிதிகளின் அடிப்படையில், ஒன்றாகவே இருந்தன, என விளக்கப்படுகிறது.

55. தக்வா - இறையச்சம், அனைத்து நன்மைகளையும் கொண்ட, தொகுப்பாகும்! ஒவ்வொரு சமுதாயத்தின் வெற்றிக்கும் இதுவே காரணமாகும்.

56. திருக்குர்ஆன் பரக்கத் நிறைந்தது, என்பதன் பொருள், ‘மிக்க பலன்தருவது’ என்பதாகும். அதனை மனனம் செய்வது, ஓதி வருவது, விளக்கத்தைப் பெறுவது, மற்றும் அமல் செய்வதில், அதன் பரக்கத் இருக்கிறது.

57. பொய் சொல்வது, பழிப்பிற்குரிய செயல் ஆகும். இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று நிர்ப்பந்திக்கப்பட்ட சமயத்தில் சிலேடையாக (அத்தவ்ரியா) பதிலளிப்பது ஆகுமானதே!

58. ஆதாரங்கள் மற்றும் சான்றுகள் முன்னிலையில், தோற்றவர்கள் எப்போதும், தங்களின் பலத்தையும், அக்கிரமத்தையும் அரங்கேற்றுவார்கள் ; பழிவாங்குவார்கள் ; அதனால் திருப்தியடைவார்கள். இப்றாஹீம் (அலை) அவர்களின் சமூகத்தினரும், இப்படித்தான் நடந்து கொண்டனர். قالوا حرقوه وانصـــروا آلهـتكم ان كـنـتم فاعلـين ... அவ்வாறே பிர்அவ்னும் நடந்துகொண்டான். قال لئن التخذت الها غيري ...

59. மனத் தூய்மையுடன், அல்லாஹ்வை நெருங்குவது, வெற்றி பெறுவதற்கான முக்கியக் காரணமாகும். இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிப்பதாவது: இப்றாஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் போடப்பட்டபோது, இப்படிக் கூறினார்கள்: حســـــــبنا الله ونعم الوكيل (எதிரிகளின் பெருங்கூட்டத்தைக் கண்டபோது) நபி (ஸல்) (மற்றும் தோழர்கள்) இவ்வாறுதான் கூறினார்கள்: الذين قال لهم الــناس ان الناس قد جمعوا ...وقالو حسبنا الله ونعم الوكيل

60. நபி லூத் (அலை) அவர்களுடன் ஹிஜ்ரத் செய்த முதல்மனிதர், நபி இப்ராஹீம் (அலை) அவர்களே! ஹிஜ்ரத்தின் சிறப்பும் மகத்துவமும் இதன் மூலம் புலனாகின்றது. மார்க்கத்தைப் பின்பற்றுவதில் குழப்பம் ஏற்படும் என அஞ்சுகின்றபோது, கடமைகளை நிறைவேற்றத் தடை ஏற்படுகின்றபோது, ஹிஜ்ரத்

கட்டாயமாகிறது.

61. ஏகத்துவ அழைப்பு, இப்றாஹீம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து, ஆரம்பமாகிறது என எண்ணுவது, தவறு ஆகும். உண்மையில் தவ்ஹீத் (ஏகத்துவம்) இயற்கையானது! இதன் மீதே அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான் ; விண்ணையும் மண்ணையும் மற்றும் வானவர்களையும், இதன் மீதே நிலைபெறச் செய்துள்ளான்.

62. அல்லாஹ் தன் அடியார்களுக்குத் தடை செய்திருக்கின்ற அனைத்தும், அசிங்கமானவைகளும், தீங்கிழைப்பவைகளும்தான்!

63. பயனுள்ள கல்வி, மகத்தான கண்ணியத்திற்கான ஆதாரம் ஆகும். நபிமார்கள் யாவருக்கும், அல்லாஹ் தந்த கல்வியின் மூலமாக, அவர்கள் மக்களுக்கு மத்தியில் தொலைநோக்குடன் பணி செய்து வந்தனர்.!

64. குழப்பவாதிகளை அழிப்பது, அல்லாஹ்வின் வழிமுறையாகும். எனவே முந்தைய (அக்கிரம) சமுதாயங்களுடைய அழிவின் மூலமாக, (வாழும்) அக்கிரமக்காரர்கள், எச்சரிக்கப்படுகிறார்கள். وما هي من الظالمين ببعيد

65. நூஹ்(அலை) அவர்களின் வாழ்விலிருந்து, மகத்தான பாடம் கிடைக்கிறது; அவர்கள் கண்ட கஷ்டங்கள், சகித்த துயரங்கள் என்னென்ன? என, பொறுமையாக இருப்பதற்குரிய உன்னதமான உதாரணங்கள், தரப்படுகின்றன..!

66. ‘இனி உம் சமுதாயத்திலிருந்து, எவரும் விசுவாசம் கொள்ளமாட்டார்’ .. என அல்லாஹ் அறிவிக்காதவரை, நூஹ் (அலை) அவர்கள், தமது சமுதாயத்தை அழிப்பதற்காகப் பிரார்த்திக்கவில்லை!

67. அக்கிரமத்தின் உச்சத்திற்கு, குரைஷிக் காபிர்கள் இறங்கி வந்தபோது, கஷ்டத்தில் உழன்ற நூஹ் (அலை) அவர்களின் ‘துஆ’, அல்லாஹ்வால் ஏற்கப்பட்டதை, (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நினைவு கூர்ந்தார்கள்.

68. சோதனைகள் சில சமயங்களில், அருட்கொடைகள் அதிகமாக்கப்படுவதன் மூலமாகவும் வரலாம் ; குறைக்கப்படுவதன் மூலமாகவும் வரலாம் என்பதை ஸுலைமான் (அலை) அவர்களின் கூற்று ليبلوني أأشكر أم أكفر தெரியப்படுத்துகிறது.

69. நபிமார்களின் சரித்திரங்களில் இருந்து, அவர்கள் சந்தித்த சோதனைகளின் பல்வேறு வடிவங்கள் தெரியவருகின்றன.. சில வேளைகளில் சமுதாயத்தினரின் மறுப்பு, தீங்கு செய்தல், உதாரணமாக: நபிமார்கள் இப்றாஹீம், லூத், நூஹ் (அலை) ஆகியோர் கண்ட சோதனைகள்! அருட்கொடைகள் தரப்பட்டு சோதிக்கப்படுதல்.. உதாரணமாக: ஸுலைமான் (அலை), தாவுத்

(அலை) ஆகியோர் கண்ட சோதனைகள்! இழப்பின் மூலமாகச் சோதிக்கப்படுதல்.. உதாரணமாக: அய்யூப் (அலை) சந்தித்த சோதனைகள்! இச்சோதனைக் காலங்களில், எல்லோருமே, எப்போதுமே, உடனடியாக உதவி தேடியவர்களாக, அல்லாஹ்வையே நாடியுள்ளார்கள்.

70. நபிமார்கள், தொற்றுநோய்களில் இருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்; நபி அய்யூபு (அலை) அவர்கள் கண்டநோய், தொற்று நோயன்று! வழக்கத்திற்கு மாற்றமானது; அது சோதனையாக வந்தது! அய்யூப் (அலை) அவர்கள், உதாரணம் காட்டும் அளவிற்கு, பொறுமையின் சிகரமெனத் திகழ்ந்தார்கள்..!

71. உலகம் ஒரு சோதனைக் களம் ஆகம். இறைவிசுவாசிகள் அதிகம் சோதிக்கப்படுவார்கள்.. நபி (ஸல்) அவர்களிடத்தில் அதிகம் சோதனைக்கு உள்ளாகுவோர், யார் என விசாரிக்கப்பட்டது. அப்போது, 'நபிமார்கள்; பிறகு (இறையச்சத்தில்) அவர்களைப் போன்றவர்கள்' என்றனர் நபி (ஸல்) அவர்கள். ஆக மனிதர்கள் அவர்களின் மார்க்கப் பற்றிற்கேற்ப, சோதிக்கப்படுவார்கள். மார்க்கத்தின் மீதான உறுதி அதிகமிருக்கின்றபோது, சோதனை அதிகமாகவும், குறைவாக இருக்கும்போது, சோதனை குறைவாகவும் இருக்கும். பாவங்கள், கரைகின்றவரை, சோதனைகள் தொடரும்..

72. அல்லாஹ்விடம் முறையிடுதல், பொறுமைக்கு எந்தவகையிலும் குந்தகம் ஏற்படுத்தாது.. ஸுஃப்யான் பின் உயைனா (ரஹ்) கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் விதியைப் பொருந்திய நிலையில், அவனிடம் முறையிடுவோர், பலவீனனர்கள் அல்ல..!

انما أشكو بثّي وحزني الى الله

73. அய்யூப் (அலை) அவர்கள் குளித்துக் கொணடிருந்தபோது, தங்கத்தால் ஆன பறவைகள் வந்து விழுந்தன; அவைகளை அவர்கள் தன் ஆடையில் சேகரிக்கலானார்கள். உடனே அவர்களின் 'ரப்' இப்படிக் குரல் கொடுத்தான்: ' ஸுலைமானே! நீர் பார்ப்பவைகளை விட்டும் நான் உம்மைத் தேவையற்றவராக ஆக்கவில்லையா?! ' அதற்கு அவர்கள் கூறினார்கள்: 'ஏன் இல்லை! ஆனாலும் நான் உன் அருளை விட்டும், தேவையற்றவனாக ஆக முடியாதே!'. (அல்புகாரீ – 7493)

74. وذكرى للعابدين... வணக்கசாலிகள், சிந்தித்து அறிவோராய்த் திகழ்ந்திடுக! பொறுமை மற்றும் சுயபரிசோதனை மேற்கொள்வோராய்த் விளங்கிடுக! என்கிற குறிப்பை இவ்வசனம் தருகிறது. 'ஆபிதீன்' - வணக்கசாலிகள் என்ற இந்த பதம், இத்தகையோர், சிறப்புப் பயனைப் பெறப் போகிறவர்கள், என்கிற விளக்கத்தைத் தருகிறது.

75. நல்லடியார்களில் ஒருவருடைய ஏதேனும் ஒரு நற்குணத்தைப்

பெற்று அதைத் தன்னில் வரித்துக்கொள்கிறவரை, அல்லாஹ் அவருடன் சேர்த்துவைப்பான். நல்லோரை முன்மாதிரியாக் கொள்வதற்கும், அவர்களைப்போல் நல்லறம் புரிவதற்கும் ஆர்வமூட்டப்படுகிறது.

76. மனமார்ந்த முறையில் கேட்கப்படுகின்ற பிரார்த்தனை, கவலைகள் அனைத்தில் இருந்தும் விடுதலை பெறுவதற்கான வழிமுறையாகும். மீனுடைய வயிற்றில் இருந்து, நபி யூனுஸ் (அலை) கேட்ட ‘துஆ’ : لا إله إلا أنت سبحانك إني كنت من الظالمين .இதில், ஒரு முஸ்லிம், இந்த துஆவை ஓதிப் பிரார்த்தித்தால், அல்லாஹ் அவரது அழைப்பை ஏற்பான், என்கிற வழிகாட்டுதல் மற்றும் பாடம் உள்ளது.

77. ஏதேனும் ஒரு காரியத்தை, அல்லாஹ்வால் செய்ய இயலாது, என ஒருவர் எண்ணினால், அவர் அல்லாஹ்வை மறுத்தவர் ஆவார்! நபிமார்கள் இத்தகைய ‘குப்றான’ காரியத்தைச் செய்வதை விட்டும், தூய்மையானவர்கள்.

78. த∴வா – அழைப்புப்பணியில், பொறுமை, சகிப்புத்தன்மை, கஷ்டம், நிலைகுலையாமை, கோபத்தை விழுங்குதல் போன்றவை அவசியமானதாகும். அழைப்பது, ஒரு காரணமே! நேர்வழி இருப்பது, அல்லாஹ்விடமே! ஆகும்.

79. செய்த தவறுகளுக்காக வருந்துவதும், செய்த நன்மைகளைக் குறைவாக மதிப்பிடுவதும், நல்லடியார்களின் அடையாளங்களாகும். இவர்கள் தம் தந்தை ஆதம் (அலை) அவர்களுடைய அடியொற்றி நடப்பவர்கள்; ஷைத்தானின் சூழ்ச்சி, வரம்பு மீறுதல் மற்றும் தவறுகளை நன்மையென சாதிக்கும் தன்மை ஆகியவைகளில் இருந்து, விலகி இருப்பவர்கள்.

80. ஜகரிய்யா (அலை) அவர்களின் ‘துஆ’ வும், அய்யூப் (அலை) அவர்களின் ‘துஆ’ வைப் போன்றே, பணிவைப் போதிப்பதாக, இப்படி இருக்கிறது.. என் ரப்பே! நீ எனக்குக் குழந்தையைத் தரவில்லையெனில், யார் எனக்கு வாரிசாவார்?! இருப்பினும் நீ எனக்கிருந்தால் எனக்குக் கவலையில்லை ; நீயே சிறந்த வாரிசாவாய்!

81. ஜகரிய்யா (அலை) அவர்களின் துஆ – வில் இடம்பெறுகின்ற وأنت خير الوارثين பதமும், அய்யூபு (அலை) அவர்களுடைய துஆ – வில் இடம்பெறுகின்ற وأنت أرحم الراحمين பதமும், நம் தேவையை ஒட்டிய அல்லாஹ்வின் தன்மையைத் (திருப்பெயரைக்) குறிப்பிட்டு துஆ செய்வது, விரும்பத்தக்கதாகும், எனக் காட்டுகின்றன.

82. சமுதாயத்தின் ஒற்றுமை, அவர்கள் தவ்ஹீத் - ஏகத்துவத்தில் நிலைபெற்றிருப்பதில் மட்டுமே உள்ளது. இது இல்லையேல், பிரிவினையும் முரண்பாடும் தலையெடுக்கும்.

83. இஸ்லாமிய மார்க்கமே, தூயமார்க்கம் ஆகும்; இதனையே யாவரும் ஏற்கவேண்டும்.

84. ஈமான் - இறைவிசுவாசமும், அமல் ஸாலிஹ் - நற் செயல்களும், ஒன்று இல்லையேல், மற்றொன்று இல்லை!

85. மார்க்க விஷயங்களில், முரண்பாடு கொள்ளுதல், அழிந்தொழிய வழிவகுக்கும்.

86. وتقطعوا أمرهم بينهم.. 'தம் மனோஇச்சையின் காரணத்தால், மார்க்கத்தைத் துண்டு துண்டாக்கிவிட்டார்கள்', என்பது அரியதோர் உவமை, ஆகும். இதில், நுட்பமான உருவகம் இருக்கிறது..!

87. மு.ஃமின்கள் மற்றும் காபிர்கள் இடையே, ஒப்பீடு செய்வதும், அவர்கள் பெற்ற அருட்கொடைகளிடையே ஒப்பீடு செய்வதும், திருக்குர்ஆனின் ஒரு பாணியாகும். بشيرونذير

88. ஆட்சியும் அதன் செழிப்பும் (வாழ்க்கையின்) அசல் நோக்கமன்று! அவை (வாழ்விற்கான) காரண காரியங்கள் ஆகும். ஆட்சியில் இருந்தாலும் இல்லையென்றாலும், வணக்க வழிபாடும், அதில் தவ்ஹீதை நிலை நிறுத்துவதும்தான், (வாழ்வின்) இலட்சியமாகும்..!

89. ஜின்கள் மற்றும் மனிதர்களில், முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி செவியுறுகின்ற, அனைவருக்கும், அவர்களை விசுவாசிப்பது, கட்டாயமானதாகும்.

90. உலக வாழ்க்கை.. வரையரைக்கு உட்பட்டது; நிலையற்றது ஆகும். அல்லாஹ்விற்குக் கட்டுப்படுவதை, விட்டுவிட்டு, அதில் மூழ்கிக்கிடப்பது, அறிவுடையோர்க்கு அழகன்று!

فلا تغرنكم الحياة الدنيا ولا يغرنكم بالله الغرور

91. அவன்தான் அருளாளன் - ரஹ்மான்! நியாயத் தீர்ப்புநாளை அவன் நிர்ணயித்திருப்பதே, அவனுடைய கிருபைதான். ஏனென்றால் இதன்மூலம், நல்லோர்க்கு நற்கூலியையும், தீயவர்களுக்கு, அவர்களது நிராகரிப்பிற்கான கூலியையும் அவன் வழங்குவான்.. இதுவே மிகப்பெரிய உபதேசம் ஆகும்.

## தொடர்பு
## நுட்பமான விரிவுரைகள்

❖ இந்த இரு ஸூராக்களும், (தாஹா மற்றும் அல்அன்பியா) மூன்று உண்மைகளைப் பேசுகின்றன: அவை, காபிர்களின் ஆட்சேபனைகளுக்குப் பதில்... நபிமார்களின் உறுதி குலையாமைக்கான (உதாரண) நிகழ்வுகள்... முரண்பட்டு நின்றோர், கண்ட முடிவுகள்.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

وَدَاوُودَ وَسُلَيْمَانَ إِذْ يَحْكُمَانِ فِي الْحَرْثِ إِذْ نَفَشَتْ فِيهِ غَنَمُ الْقَوْمِ وَكُنَّا لِحُكْمِهِمْ شَاهِدِينَ 21:78

21:78. இன்னும் தாவூதும், ஸுலைமானும் (பற்றி நினைவு கூர்வீராக!) வேளாண்மை நிலத்தில் அவர்களுடைய சமூகத்தாரின் ஆடுகள் இரவில் இறங்கி மேய்ந்த போது, அதைப் பற்றி அவ்விருவரும் தீர்ப்புச் செய்த போது, அவர்களுடைய தீர்ப்பை நாம் கவனித்துக் கொண்டிருந்தோம்.

## அல்ஹதீஸ்

كانت امرأتان معهما ابناهما ، جاء الذئب فذهب بابن احداهما ، فقالت لصاحبتها: انما ذهب بابنك – الخ

இரண்டு பெண்கள் இருந்தனர்! அவர்களோடு அவர்களின் குழந்தைகள் இருவரும் இருந்தனர்.. ஒரு ஓநாய் வந்து, அவர்களில் ஒருவருடைய குழந்தையைத் தூக்கிச் சென்றுவிட்டது; அவ்விருவரில் ஒருத்தி, ‘உன் மகனைத்தான் கொண்டுசென்றுள்ளது’ என்றார். மற்றொருத்தி, ‘உன் மகனைத்தான் கொண்டுசென்றது’ என்றார். தாவூத் (அலை) அவர்களிடத்தில் வழக்கைக் கொண்டுவந்தனர். தாவூத் (அலை) பெரியவளுக்குச் சார்பாக, தீர்ப்பளித்தனர். பிறகு இருவரும் ஸுலைமான் பின் தாவுத் (அலை) அவர்களிடத்தில் சென்றார்கள்; இதனை முறையிட்டார்கள்! அதற்கு ஸுலைமான் (அலை) அவர்கள், ‘கத்தியொன்றை என்னிடம் கொணர்க! அக்குழந்தையை, இருவருக்கும் பிளந்து தருகிறேன்.. என்றார்கள். அதற்குச் சிறியவள் சொன்னாள்: ‘ அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக! அவ்வாறு செய்திடாதீர்! அக்குழந்தை பெரியவளுடையதே! உடனே, ஸுலைமான் (அலை) அவர்கள், சிறியவளுக்காகத் தீர்ப்பளித்தனர்.! (அல் புகாரீ: 6769)

## திருக்குர்ஆன்

وَأَيُّوبَ إِذْ نَادَىٰ رَبَّهُ أَنِّي مَسَّنِيَ الضُّرُّ وَأَنتَ أَرْحَمُ الرَّاحِمِينَ 21:83

21:83. இன்னும், ஐயூப் தம் இறைவனிடம் "நிச்சயமாக என்னை (நோயினாலான) துன்பம் தீண்டியிருக்கிறது (இறைவனே!) கிருபை செய்பவர்களிலெல்லாம் நீயே மிகக் கிருபை செய்பவனாக இருக்கின்றாய்" என்று பிரார்த்தித்த போது..,

### அல்ஹதீஸ்

عن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم:
بينما أيوب يغتسل غريانا، خرعليه رجل جراد من ذهب– الخ (صحيح البخاري : ٧٤٩٣)

ஒரு முறை நபி அய்யூப் (அலை) அவர்கள், நிர்வாண நிலையில் குளித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் மீது தங்கத்தாலான வெட்டுக்கிளிகள் விழுந்தன; அவைகளை தமது ஆடையில் சேகரிக்கலானார்கள். உடனே அவர்களின் இறைவன் அழைத்தான்; ஓ அய்யூப்! நீர் பார்ப்பவைகளை விட்டும், உம்மைத் தேவையற்றவராக நான் ஆக்கவில்லையா!? என்றான். அதற்கு, ''ஏனில்லை என் ரப்பே! இருந்தாலும் உன் அருளை விட்டும், நான் தேவையற்றவனாக ஆக இயலாதன்றோ! (அல்புகாரீ : 7493)



## மொழிபெயர்ப்பாளர்கள்

1) அஷ்ஷைக் அல்ஹாபிழ்
ம.முஹம்மது இஸ்மாயீல் உமரீ - உடன்குடி
ஸூரா அல்-பாதிஹா முதல் ஸூரா அல்-அன்பியா வரை

2) அஷ்ஷைக்
A. ஹகீம் தீன் உமரீ - மதுரை
ஸூரா அல்-ஹஜ் முதல் ஸூரா முஹம்மத் (ஸல்) வரை

3) அஷ்ஷைக்
M. முஹம்மது ரியாஸுத்தீன் உமரீ - ரிஷிவந்தியம்
ஸூரா அல்-பத்ஹ் முதல் ஸூரா அந்-நாஸ் வரை